பக்கங்கள் : பதின்நான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 18 புதன்கிழமை (02.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 217

# ஜனாதிபதி பயணிக்கும் ஹெலி அணி மீது அம்பாறை உல்லையில் வைத்துத் தாக்குதல்!

## சேதமுற்ற ஒன்று அவசரமாக தரையிறக்கம்

கொழும்பு, ஜூலை 02

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயணம் செய்யும் ஹெலிக்கொப்டர் அணி மீது அம்பாறை மாவட்டம் உல்லைக் காட்டுப் பகுதியிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் ஜனாதிபதியை ஏற்றிவரச் சென்ற ஹெலிக்கொப்டரில் ஒன்று சேதமடைந்து அவசரமாகத் தரையிறக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.**

எனினும், தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே இந்த ஹெலிக்கொப்டர் தரையிறக்கப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

கிழக்கு மாகாணத்தில் பொத்துவில், அறுகம்குடாவையும், பாணமையையும் இணைக்கும் பாலத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் கொழும்பிலிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் அங்கு சென்றிருந்தார்.

அவரது பயணத்தை ஒட்டி அப்பகுதியில் பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மாவின் விலை 2 ரூபா குறைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள கோதுமைமாவின் விற்பனை விலை இரண்டு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் ஒரு கிலோ கோதுமை மாவை 79 ரூபாவுக்கு விற்பனை செய்யும்படியும்-

தேவையான மாவை செயலகத்தில் ப.நோ.கூ.சங்கங்கள் பெற்றுக் கொள்ளும்படியும்- அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார். (அ-1)

## விசேட அதிரடிப் படையினரின் முகாம் மீது பொத்துவில் செங்காமத்தில் ஷெல் தாக்குதல்

கொழும்பு, ஜூலை 2

பொத்துவில், செங்காமத்தில் உள்ள சிறப்பு அதிரடிப் படையினரின் முகாம் மீது நேற்று நண்பகலுக்குச் சற்றுப் பின்னராக- சுமார் முப்பது நிமிட நேரம் - கடுமையாகத் தாங்கள் நடத்திய ஷெல் தாக்குதலில் படைத்தரப்புக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள புலிகள், படைத்தரப்புக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும் தகவல் வெளியிட்டிருக்கின்றனர்.

இத்தாக்குதலில் குறைந்தது இரு படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 8 குண்டு வீச்சு விமானங்கள் அம்பகாமம் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூன் 02

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, மாங்குளச்சந்திக்கு வடகிழக்கே எட்டுக் கிலோமீற்றர் தொலைவில் உள்ள அம்பகாமம் பகுதியின் மீது நேற்றுக் காலை 6.15 மணியளவில் விமானப்படையினரின் ஜெற் விமானங்கள் வான் தாக்குதல்களை நடத்தின.

இத்தாக்குதல்களில் 8 ஜெற் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன என்றும் -

அப்பகுதியில் உள்ள வான் புலிகளின் விசேட பயிற்சித் தளங்களின் மீதே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் படைத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே**

**கல்விச்சுடர்**

**7 ஆம் பக்கத்தில்:**
**க.பொ.த (உயர்தர)மாதிரி வினாத்தாள்**
**★ கணக்கீடு**

**8 ஆம் பக்கத்தில்:**
**★ தரம் - 5 மாணவருக்கான இலகுவழிப் பரீட்சை**

## பாலமோட்டையில் நேற்றுக் கடும் சமர்!

கொழும்பு, ஜூலை 02

வவுனியா, பாலமோட்டைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையில் நேற்றுக் கடும் சமர் இடம்பெற்றிருக்கிறது. இச்சமரில் படையினர் மூவர் உயிரிழந்தனர் என்றும் எட்டுப்பேர் வரை படுகாயமடைந்தனர் என்றும் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

பாலமோட்டைப் பகுதியை நோக்கி நேற்றுக்காலை 7 மணியளவில் பிற்களச் சூட்டாதரவுடன் இராணுவத்தினர் முன்னேற முயன்றனர். அதற்கு எதிராகத் தாம் மேற்கொண்ட பதில் தாக்குதலில் பலத்த இழப்புகளுடன் இராணுவத்தினர் பழைய நிலைகளுக்குத் திரும்பிச் சென்றனர் என்றும் புலிகள் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் பாலமோட்டை, கோவிற்கஞ்சிகுளம் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளில் இருவர் உயிரிழந்தனர். மேலும் மூவர் படுகாயமடைந்தனர் என்றும் - அப்பகுதிகளில் விடுதலைப் புலிகளின் பொறிவெடிகளில் சிக்கிப் படையினர் மூவர் உயிரிழக்க இருவர் படுகாயமடைந்தனர் என்றும் - படைத்தரப்பில் கூறப்படுகின்றது. (சி)

## ஊடகவியலாளர் மீதான தாக்குதல்: அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

### சுதந்திர ஊடக இயக்கம் பார்த்திருக்கிறது

கொழும்பு, ஜூலை 02

ஊடகவியலாளர் நாமல் பெரேரா மற்றும் பிரிட்டிஷ் தூதரக அரசியல் அதிகாரி மகேந்திர ரட்ணவீர ஆகியோர் மீது தாக்குதலை மேற்கொண்டவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கின்றது என்பதைத் தான் உன்னிப்பாக அவதானிக்க போவதாக சுதந்திர ஊடாக இயக்கம் தெரிவித்துள்ளது.

சுதந்திர ஊடக இயக்கம் இந்தத் தாக்குதலை கண்டித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஊடகங்களுக்கு எதிரான அழுத்தங்கள் பற்றி ஆராய அரசால் உருவாக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் செயல்திறனிற்கான அமிலப் பரீட்சையாக நாமல் பெரேரா மீதான தாக்குதல் விசாரணை கணிக்கப்போவ

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு இந்தியா தாராளமாக ஆயுத விநியோகம், விசேட படைப் பயிற்சி

### 'டைம்ஸ் ஒவ் இந்தியா' நாளிதழ் தகவல்

புதுடில்லி, ஜூலை 02

இலங்கையின் இன மோதலுக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் முயற்சிகளுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்குமாறு இலங்கையை வற்புறுத்தும் இந்தியா, அதேவேளை இலங்கை இராணுவத்திற்குத் தனது பல்வேறு இராணுவக் கட்டமைப்புகளில் பயிற்சியையும் வழங்கவுள்ளதாக 'டைம்ஸ் ஒவ் இந்தியா' தெரிவித்துள்ளது.

2008 - 2009இல் மாத்திரம் இலங்கையைச் சேர்ந்த 500 இராணுவ அதிகாரிகளும் ஏனைய தரத்தினரும் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் காட்டுப் பகுதிகளில் போர் புரிதல் போன்றவற்றில் பயிற்சிகளைப் பெறவுள்ளனர்.

மிஸோரமின் வைரென்டே மற்றும் மகாரஷ்டிராவின் டேவ்லாலியில் உள்ள ஆட்டிலறி கல்லூரி ஆகியவற்றில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைச் சோதனைச் சாவடியிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விலகல்

### வன்னிக்கான பயணங்கள் பாதிப்புறும் அபாயம்

வவுனியா, ஜூலை 2

ஓமந்தைச் சோதனைச் சாவடிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தையடுத்து அந்தச் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபடுவதிலிருந்து தாங்கள் விலகியிருப்பதற்கு முடிவு செய்திருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் தகவல் அதிகாரி சரசி விஜேரட்ண தெரிவித்தார்.

இந்தச் சோதனைச் சாவடி ஊடாகப் பயணம் செய்யும் பிரயாணிகளினதும் தமது ஊழியர்களினதும் பாதுகாப்பு தமக்கு முக்கியமானது என்பதால் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதும் தமது பணியாளர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 17 ஆம் திகதியன்று

கொழும்பு, ஜூலை 2

இந்த வருடத்துக்கான தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடத்தப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இவ்வருடம் 5 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத்தோற்றவுள்ளனர். கடந்த வருடங்களை விட இம்முறை இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சிவிலியன்களை இலக்கு வைக்காதீர்! இரு தரப்பிடமும் ஒன்றாகக் கோரிக்கை

### செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விடுக்கின்றது

கொழும்பு, ஜூலை 02

இலங்கையில் கடந்த சில மாதங்களில் பொதுமக்கள் இலக்குவைத்துக் கொல்லப்படுவது அதிகரித்துள்ளமை குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

பொதுமக்களின் உயிர்களுக்கு மதிப்பளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த சில மாதங்களாக

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கல்வியற்கல்லூரியின் 35 டிப்ளோமாதாரிகளுக்கு தேசிய பாடசாலைகளில் நியமனம்

## நேர்முகப்பரீட்சை கொழும்பில்

யாழ்ப்பாணம், ஜூலை 2

கல்வியிற் கல்லூரியில் இருந்து திறமை அடிப்படையில் தேசிய பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ள 35டிப்ளோமா தாரிகளுக்குமான நேர்முகப் பரீட்சை எதிர் வரும் 14ஆம் திகதி கொழும்பில் நடை பெறவுள்ளது.

கல்வியமைச்சில் நடைபெறவுள்ள இந்த நேர்முகப் பரீட்சையில் பங்குபற்ற வேண்டிய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வர்கள் கப்பல் வசதியைப் பெறுவதற்காக பயண அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தினை எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப் புச் செயலகத்தில் பதிவு செய்து பயணத்தை உறுதிப்படுத்துமாறு அரச அதிபர் கேட்டுள் ளார்.

அதற்கு முன்னர் கொழும்பு செல்வதற் கான பயண அனுமதியைப் பெறுவதற்கு தமக்குரிய பிரதேச செயலகத்தில் உரிய விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூர ணப்படுத்தி வழமையான முறைப்படி உறு திப்படுத்தி அரச அதிபரிடம் சமர்பிக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட் டோர் விவரம் வருமாறு:-

**ஆரம்பக்கல்வி** - என்.ஜெயரூபன், செல்வி ஐ.கஜலக்சுமி, செல்வி ரி.மீரா, செல்வி கே.தர்சனி, செல்வி எஸ்.தனப்பிரியா, செல்வி வி.கிருபாந்தனி, செல்வி எஸ். காஞ்சனா, செல்வி ஏ.சர்மிளா.

**விஞ்ஞானம்** - வி.சரிதா, செல்வி கே.கார்த் திகா, செல்வி எஸ்.கஜவதனி, செல்வி பி.குகவதனா.

**கணிதம்** - எஸ்.சுஜிந்தன், செல்வி பி.சசி கலா, யு.தனசங்கர், செல்வி பி.கிருஷா, செல்வி பி.பிரியதர்சனி, செல்வி என்.வித்யா, ஆர். எஸ்.மயூரன்.

**கலை** - எஸ்.கஜேந்திரன், எம்.சிமோன், எஸ். கோகிலன், வி.தாஜகன்.

**சங்கீதம்** - ஆர்.பிரபு.

**நடனம்** - செல்வி எம்.நர்மதா.

**விசேட கல்வி** - செல்வி எஸ்.பகீரதி.

**விவசாயம்** - செல்வி ஆர்.விதனா.

**ஆங்கிலம்** - செல்வி ரி.ஹிமாலோ கினி, செல்வி எஸ்.அனுசீலா, செல்வி சி.சிந்துஜா, செல்வி எஸ்.சங்கீதா, செல்வி ஜெ.ஆலினி சிராந்தி, செல்வி என்.தாட்சாயனி, செல்வி வை. யசீதிரா, எஸ்.டக்ளஸ்.

## வல்வை சிவகுருவில் ஆக்கத்திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 02

வல்வை சிவகுரு வித்தியாசாலையின் மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட ஆக்கத்திறன் கண்காட்சி நாளை வியாழக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப 2 மணி வரை நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு மாண வர்களை ஊக்குவிக்குமாறு வித்தியாலய அதிபர் ஏ.சிவாநந்தன் பெற்றோர், கல்வி அதிகாரிகளை கேட்டுள்ளார். (1)

# பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டவேலைகள் இம்மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும்

## மாநகரசபை ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.மாநகரசபையின் எல்லைக்குட் பட்ட சனசமூக நிலையங்களுக்கு பன்மு கப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்டத் தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதிதொடர் பான வேலைத்திட்டங்கள் இந்தமாத இறுதிக்குள் நிறைவேற்றப்படவேண்டும்.

எனவே சனசமூக நிலையங்கள் உடனடி யாக மாநகரசபையுடன் தொடர்பு கொண்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கு மாறு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் ஆகியோர் நல்லூர், யாழ்ப்பாண பகுதிச் சனசமூக நிலையங்களுக்கு இந்தவருட நிதி ஒதுக் கீட் டில் இருந்து வழங்கிய நிதி பகிர்ந்து அளிக் கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நாவந்துறை சென் நீக்கிலஸ் சனசமூகநிலையத்தின் அமைப்பு வேலைகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவின் நிதியில் இருந்து ரூபா ஐம்ப தாயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாவாந்துறை நித்திய ஒளிசன சமூக நிலை யத்தின் விளையாட்டு உபகரணத் தேவைக் காக மேலும் 50 ஆயிரம் ரூபா அமைச்சரது நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.

தந்தை செல்வா நினைவாலயத்தின் கிழக்கு நுழைவாயிலில் அமைக்கப்பட உள்ள பாலத்திற்கு நாடாளுமன்ற உறுப் பினர் மாவைசேனாதிராசா ஒருலட்சத்து 75ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

குருநகர் புதுமைமாதா வாசிகசாலைக்கு தளபாடக் கொள்வனவிற்காக ஒருலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

குருநகர் மெஸ்க்கி சனசமூகநிலையத் திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வின் நிதியில் இருந்து ரூபா 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி 'பாண்ட் வாத்திய செற்' வாங்குவதற்கு பயன் படுத்தப்படும் என்று கூறப்பட்டது.

நல்லூர் பகுதியில்' உள்ள சனசமூக நிலையத்திற்கு குடிதண்ணீர் விநியோகத் துக்காக நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம் பரநாதன் 50 ஆயிரம் ரூபாவும் நல் லூர் சென்யேம்ஸ் முன்பள்ளிக்கு மாவை சேனாதிராசா கற்பித்தல் உபகரணக் கொள் வன விற்காக 50 ஆயிரம் ரூபாவும் அந்த பகுதி யைச் சேர்ந்த கலைமகள் சனசமூக நிலை யத்திற்கு தளபாடம் செய்வதற்கு நாடா ளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பர நாதன் 50 ஆயிரம் ரூபாவும் வழங் கியுள்ளனர்.

(203-302)

## உதைப்பந்தாட்டம்

வலி.வடக்கு, ஜூலை 2

அமரர் சந்திரகுமாரின் 12வது ஆண்டு ஞாபகார்த்தமாக அராலி திருமகள் விளை யாட்டுக்கழகம் வலிகாமம் உதைப்பந் தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத் திவரும் 7பேர் பங்குபற்றும் உதைப்பந் தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன் கிழமை பி.ப. 3.30மணிக்கு இடம்பெறவுள்ள காலிறுதி ஆட்டங்களில் கலந்துகொள்ள வுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* அராலி தாவடி காளியம்பாள் வி.க. எதிர் இளவாலை யங்ஹென்றீஸ் வி.க.

மற்றும் ஓர் ஆட்டத்தில் ஞான முருகன் விளையாட்டு கழகத்துடனான போட்டியும் இடம் பெறவுள்ளது. (1-86)

## சீனி, லக்ஸ்பிறே கூ.சங்கங்களுக்கு ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை 02

குடாநாட்டுக்கு 'றுகுணு' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள சீனி, லக்ஸ்பிறே பால்மா ஆகியன ப.நோ.கூ.சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஒதுக்கீட்டுக்கான வழங்கற்கட்ட ளைகளை இன்று முதல் மாவட்ட புனர் வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் பெற் றுக் கொள்ளலாம் என்று அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். (1)

## மனிதமேம்பாட்டு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 2

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத் தின் மனித மேம்பாட்டுச் செயலமர்வும் மாணிக்கவாசகர் சுவாமிகளின் குருபூசை யும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வித்தியாலய மண்டபத் தில் இடம்பெறவிருக்கின்றன.

பாடசாலை அதிபர் திருமதி வ.வைகுந் நாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தென்மராட்சி வலய பிரதித் திட்டமிடல் கல்விப் பணிப்பாளர் நா.சத் தியநாதன் முதன்மைவிருந்தினராக கலந்து கொள்வார்.

சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங் கத்தின் 'அவனருளாலே அவன் தாழ் வணங்கி' என்னும் தலைப்பிலான சிறப் புரை, சமய தீட்சை என்பன இடம்பெறும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆலய புனரமைப்பு வேலைகளுக்கு நிதி உதவி வழங்கிய கௌரவ சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், வடமாகாண விசேட செயலணித் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி செயலாளருமான கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதோடு அவரது சேவைகள் மேலும் நீடிக்க இறையருளைவேண்டி வாழ்த்துகின்றோம்.

வழிபடுவோரும் அறங்காவலர்களும்
காமாட்சி அம்பாள் ஆலயம், நீர்வேலி.

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 02

சிவலிங்கயோக கேந்திரா நிலையம், யாழ்.குமாரசாமி வீதியிலுள்ள வேதாந்த மடத்தில் நடத்திவரும் யோகாசன வகுப்பு களின் புதிய பிரிவொன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6.30மணிக்கு ஆரம்பமாக வுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் ஆண், பெண் இருபாலரையும் கந்தர்மடத்திலுள்ள வேதாந்த மடத்தில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (அ-02)

## நல்லூர்க் குமரன் மலர் வெளியீடு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை 02

நல்லூர் கந்தசாமி கோவில் பெருந்திரு விழாவையொட்டி வழமை போல் இந்த வருடமும் நல்லூர்க் குமரன் மலர் வெளி யிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட் டுள்ளன.

மலர் வெளியீட்டுக்கான ஆக்கங்களை அன்பர்கள், சைவ அபிமானிகள், அறிஞர் கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ள னர்.

வழமைபோல் கவிதைகள், கட்டுரை கள் போன்றவற்றை அனுப்பி வைக்கமுடி யும்.

(203-302)

## விளையாட்டுத் துறையினருக்கு இன்று செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த விளையாட்டு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், விளை யாட்டு ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோ ருக்கான கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 3மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தலை மையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத் தில் வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் பணிப்பாளர் என் ... துறையும் கலந்து கொள்வார்.

(50)

## அதிஷ்டலாபச்சீட்டிழுப்பு முடிவுகள்

வலி.கிழக்கு பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்க அபிவிருத்தி நிதிக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு 30.06.2008ஆம் திகதி வலி கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு.

| பரிசுகள் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|
| 1) 1ஆம் பரிசு | 14495 |
| 2) 2ஆம் பரிசு | 14095 |
| 3) 3ஆம் பரிசு | 13422 |

ஒரே வகையான 7 ஆறுதல் பரிசில்களுக்குரிய வெற்றி இலக்கங்களாவன 03372, 10330, 04538, 11429, 08735, 11955, 13423

குறிப்பு:- அதிஷ்டசாலிகள் உரிய ஆதாரத்துடன் தலைமை அலுவல கத்திற்கு வருகைதந்து பரிசுப் பொருள்களை பெற்றுக் கொள்ளவும்.

இச் சீட்டிழுப்புக்கு அனுசரணை புரிந்தோர் விவரம்:
★ முகாமையாளர், இலங்கை வங்கி, கோப்பாய்.
★ பொது முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம் (வ.ப.), அச்சுவேலி
★ உரிமையாளர், ஸ்ரீ கண்ணகி அச்சகம், அச்சுவேலி

ஆதரவுக்கு நன்றி

வலி.கிழக்கு பிரதேச சபை,
முன்பள்ளிச் சமூகம்,
புத்தூர்.

(75984)

## மரண அறிவித்தல்

### இராசா நடராசா
(இளைப்பாறிய தபால் அதிபர்)



கொக்குவில், நந்தாவிலை பிறப்பிடமாக வும் பழைய வீதி, கோப்பாய் தெற்கை வதிவிட மாகவும் கொண்ட இராசா நடராசா (இளைப் பாறிய தபால் அதிபர்) நேற்று (01.07.2008) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு இராசா - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் மகனும், காலஞ் சென்ற அப்புத்துரை- இராசம்மா தம்பதி யினரின் மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி அப்புத்துரையின் அன்புச் சகோதரனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், சுகிர்தராஜ் (இணைப்பாளர், ஜெசாக்), துஷியந்தி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகுதந்தையும், அனுஷாந்தி (ஆசிரியர், யாழ்/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), கிரிதரன் (அமெரிக்கா) ஆகியோரின் மாமனாரும், சுஹந்தர்யா (மாணவி, புனித ஜோன் பொஸ்கோ வித்தியா லயம்), ஆத்மிஹா, நிதிலா(அமெரிக்கா), நிர்ஷாந் (அமெரிக்கா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
சுகிர் (மகன்).

(அ/553564)


## Special Promotion .......




**HP Note Book (Lap Top)**
Processor Intel Core 2 Duo 2.16Ghz
Screen 15"4' WXGATFT Display
HDD HP 120GB
Video GMA950 224MB : WIFI 802.11A-G
RAM 1GB DDRII
HP DVD R/W Double Layer
LapTop Bag
89,000/=
One Year International Warranty

**Pentium 4 Computer**
Intel Celeron 1.6 Ghz Processor
MSI DDR11 945 Mother Board
Kingston 512MB Ram
Sata 80GB Hard Disk
Samsung 15" CRT Flat Monitor
ATX Casing
Samsung DVD R/W
PS2 Keyboard & Mouse
37,000/=

**Pentium 4 Computer**
Intel Pentium 3.0Ghz Processor
Asus P5GC - MX1333 Mother Board
Kingston DDR11 512MB Ram
Sata 80GB Hard Disk
Samsung /Digimax 17" CRT Flat Monitor
ATX Casing
Samsung DVD Combo
Power Tree 650W UPS
PS2 Keyboards & Mouse
49,500/=

**Pentium 4 Computer**
Intel Pentium 2.0Ghz Dual Core Processor
Asus P5GC - MX1333 Mother Board
Kingston DDR11 1GB Ram
Sata 160GB Hard Disk
15" View Sonic / Samsung Monitor
ATX Casing
Sony DVD R/W
Power Tree 650W UPS
PS2 Keyboard & Mouse
Duest Cover
51,000/=

**Pentium 4 Computer**
Intel Pentium 3.0Ghz Processor
GigaByte 945 intel / Foxconn Mother Board
Sata 160GB Hard Disk
Kingston DDR11 1GB Ram
15" LCD Monitor
ATX Casing
Asus / HP DVD R/W
Power Tree 650W UPS
USB Keyboard & Optical Mouse
MultiMedia Speaker & Mouse Pad
59,000/=

**Pentium 4 Computer**
Intel Pentium 2.2Ghz Dual Core Processor
Intel 945GCNL Original Mother Board
Sata 160GB Hard Disk
Kingston DDR11 1GB Ram
17" View Sonic Wide Screen LCD Monitor
ATX Handle Casing
Sony DVD R/W
Power Tree 650W UPS
USB Keyboard & Optical Mouse
Mouse Pad
66,500/=

**Pentium 4 Computer**
Intel Pentium 2.4Ghz Core 2 Duo Processor
Intel 945GCNL Oringinal Mother Boards
Kingston DDR11 2GB Ram (1GB+1GB)
Sata 250GB Hard Disk
19" ViewSonic/Samsung LCD Monitor
ATX Casing
Asus / HP DVD R/W
Power Tree 650W UPS
MultiMedia Keyboard & Optical Mouse
Dust Cover
78,500/=

One Year Warranty Three Year Service
**MUSIC WORLD & COMPUTERS**
141 B, பலாலி வீதி, தபாலபெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554.
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கரவெட்டிப் பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய கலை இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகளின் பதிவுகளை இங்கே காணலாம்.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் சிறப்பு விருந்தினர்கள், கௌரவ கலைஞர்கள் ஆகியோர் விழா மேடைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.
விருந்தினர்கள் பாரம்பரிய கலையான கரகாட்டத்துடன் வரவேற்கப் படுகின்றனர்.
யாழ். அரச அதிபர் கே.கணேஷ், பிரதேச செயலர் சி.சத்தியசீலன் மற்றும் கலாசார உத்தியோகத்தர் ஆகியோருடன் கௌரவிப்புப் பெற்ற கலைஞர்கள் மேடையில் காணப்படுகின்றனர்.

# நவாலி மகா வித்தியாலயத்தில் உயர்தர கலைப் பிரிவு ஆரம்பம்

## *மாணவர்களும் ஆசீர்வதிக்கப்பட்டனர்*

யாழ்ப்பாணம், ஜூலை 2

நவாலி மகா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ (உயர்தர) கலைப்பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட்ட புதிய மாணவ - மாணவிகள் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

நவாலி மகாவித்தியாலயத்தில் 45 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் உயர்தரப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு அதில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட 16 உயர்தர மாணவர்களுக்கே ஆசீர்வாதம் வழங்கி கல்வி ஊக்குவிப்பு வழங்கப்பட்டது.

வலிகாமம் வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் ஆசீர்வதித்து ஊக்குவித்தார்.

பாடசாலை முதல்வர் இ.வசந்தகுமார் தலைமையில் ஆசீர்வதிக்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் வலிகாமம் வலய கல்வி பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் சிறப்புரை ஆற்றினார்.

பாடசாலை அதிபர் இ.வசந்தகுமார், நவாலி மகாவித்தியாலயம் '1சி' தர பாடசாலையாக உயர்வதற்கு முன்னின்று உழைத்த வலிகாமம் வலய கல்வி பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமாநில கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் முன்னாள் வலிகாமம் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் ஆகியோரை நன்றியுணர்வுடன் பாராட்டினார்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவன் தி.டினேஷ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மங்கள விளக்கினைப் பாடசாலை அதிபர், பிரதம விருந்தினர், பொது சுகாதாரப் பரிசோதகர் ச.பரமேஷ்வரன், உப அதிபர் திருமதி ஜெ.குமரேசமூர்த்தி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இறுதியில் பிரதம விருந்தினர் திருமதி றெஜினா இருதயநாதன் 16 மாணவர்களையும் தனித்தனியாக ஆசீர்வதித்து கல்விப் புலசெயற்பாட்டை மாணவர்களுக்கு உணர்வுபூர்வமாக வழங்கி கௌரவித்தார். (203-95)

## தொலைபேசி, பக்ஸ்வசதி இன்னும் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 2

பிரான்பற்று உப தபால் அலுவலகத்திற்குத் தொலைபேசி - பக்ஸ் வசதி உரிய காலத்தில் பெற்றுக் கொடுக்கப்படும் என உறுதியளித்தபோதும் இதுவரை அதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது.

இதனால் தொலைபேசி வசதியைப் பெறுவதற்காக மக்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. (203-95)

# வடமராட்சி கடற்கரையோரப் பகுதிகளில் மாலை 5 மணிக்குப் பின் நடமாடத் தடை

உடுப்பிட்டி, ஜூலை 2

வடமராட்சிப் பிரதேச கடற்றொழிலாளர்கள் மாலை 5 மணிக்குப் பின்னர் கடற்கரைப் பகுதிக்குச் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழிலாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகிறது.

இரவு 9 மணிக்கே ஊரடங்கு அமுலில் உள்ள போதும் இத்தடை விதிக்கப்பட்டுள்ளமை கவலையளிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நேரத்தடை காரணமாக மாலை நேரங்களில் செய்யப்படும் வலை தெரிதல் மற்றும் தொழிலுக்கான ஆயத்த வேலைகளைச் செய்ய முடியாத நிலை ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

எனவே இதற்கான மாற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203-155)



புகைத்தல் மது எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் செய்யப்பட்ட பெரிய சிகரெட் ஒன்றையும் வறிய மக்களுக்கு உதவும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட உண்டியல் நிதியத்திற்கு முகாமையாளர் பங்களிப்புச் செய்வதையும் படத்தில் காணலாம். (236)

# பல்வேறு இன்னல்களுக்கும் இடப்பெயர்வுக்கும் மத்தியில் மக்களுக்குச் சேவையாற்றிப் பொன்விழாக் காண்கிறது

## இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை நிகழ்வில் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் அருமைநாயகம்

மந்திகை,ஜூலை2

பல்வேறு இன்னல்களுக்கும், இடப்பெயர்வுகளுக்கும் மத்தியில் சளைக்காது சேவையாற்றி பொன்விழாக் காண்கிறது இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை. பல்வேறு இடர்களுக்கு மத்தியில் வாடிக்கையாளர்களிடையேசிறந்த சேவையை இது வழங்கியுள்ளது.

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் பொன்விழா நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றிய வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பருத்தித்துறை வீரபாகு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வுக்குப் பருத்தித்துறை வங்கி முகாமையாளர் ஜே.பி. ஆனந்த நடேசன் தலைமை தாங்கினார்.

இப் பொன் விழாவையொட்டிப் பருத்தித்துறை சிவன் ஆலயத்தில் விசேட பூசைகள், ஆராதனைகள் இடம்பெற்றன. இந்த ஆலய வாசலிலிருந்து விருந்தினர்கள், சாரண மாணவர்கள் அணிவகுத்து நிற்க 'பாண்ட்' வாத்திய இசையுடன் நகர வீதியூடாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். வீதியெங்கும் பூரண கும்பம் வைக்கப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

இலங்கை மெதடிஸ்த திருச்சபைக் குரு அருட்திரு என்.அருள்நாதன் அடிகளார் ஆசியுரை வழங்கி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஏ - 9 பாதை திறக்கப்பட்டிருந்தபோது இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் பி.ஏ.சி.பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வந்து இப்பகுதி வங்கிகளின் தேவைகளைப் பற்றி ஆராய்ந்து இந்த வங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று உறுதியளித்திருந்தார்.

இலங்கையிலுள்ள இலங்கை வங்கிகளில் வாடிக்கையாளர்களுக்குக் கடன்களை வழங்கி வெற்றிகரமாக அவற்றினை மீளப் பெறுவதில் பருத்தித்துறை இலங்கை வங்கி முன்னணியில் திகழ்ந்து சாதனை நிலை நிறுத்தி வருகின்றது.

கடந்த இரு மாதங்களில் இங்கு 4 மில்லியன் ரூபா கடன் அறவிடப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி கிராம மட்டத்தில் இலங்கை வங்கி கிராமங்களையும் தெரிவு செய்து அக்கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் கிராமிய அபிவிருத்தியையும் உயர்த்துவதிலும் அக்கறை கொண்டு செயற்பட்டு வருகின்றது.

பாடசாலைகளில் வங்கிச் சேமிப்பு அலகுகளை உருவாக்கி அவர்கள் மத்தியிலே சேமிப்பு, வங்கிப் பழக்கங்களையும் ஏற்படுத்தி வருகின்றது. கல்வி சார் நடவடிக்கைகளையும் மேம்படுத்தத் தவறுவதில்லை.

கல்வி சார்ந்த சமூக சேவைகளுக்கு வர்த்தக ஒதுக்கீட்டால் 75 வீதமான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு கல்விசார் சமூக சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வங்கி உத்தியோகத்தர்கள் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் மட்டும் சேவையாற்ற விரும்பக்கூடாது.

தாங்கள் பிறந்த மண்ணிலும் சேவையாற்றி உதவ மறுக்கக்கூடாது.

கொழும்பில் பணியாற்றிய இந்த வங்கி முகாமையாளர் இங்கு வந்து தான் பிறந்த இடத்தில் சேவையாற்றி மக்களுக்கு உதவுவதோடு சேவையின் மகத்துவத்தையும் காட்டியுள்ளார்.

பருத்தித்துறை இலங்கை வங்கி மேலும் பல்வேறு அபிவிருத்தி சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டும் - என்றார்.

விழா ஆரம்பத்திலே இலங்கை வங்கிக் கொடி ஏற்பட்டு பருத்தித்துறை இலங்கை வங்கியிலே ஆரம்பகாலம் தொடக்கம் பணியாற்றிய முகாமையாளர்களின் பெயர் பலகைகளும் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, இலங்கை வங்கி வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம், வடபிராந்திய இளைப்பாறிய உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், பிரதேச செயலர் எஸ்.வரதீஸ்வரன், நகர சபைச் செயலாளர் ஏ.ஏ.நடராஜா உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் கே.பி.ஆனந்த நடேசனின் சேவையை பாராட்டிக் கௌரவித்து பிரதம விருந்தினர் விருது வழங்கினார். ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர்கள், தற்போதைய வங்கி உத்தியோகத்தர்கள், நீண்டகால வங்கி வாடிக்கையாளர்கள், முன்னணி வாடிக்கையாளர்கள் ஆகியோரும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (203-218)

## மணிவாசகர் குருபூசை

சுழிபுரம், ஜூலை 2

தொல்புரம் பாணாவெட்டி மாணா முதலியார் பரிபாலன சபையினர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அராலியில் உள்ள மடாலயத்தில் மணிவாசகர் குருபூசை தின நிகழ்வுகளை நடத்தவுள்ளனர்.

இதில் புராணப் படனம், விசேட பூசைகள், மகேஸ்வர பூசை என்பன இடம் பெறும். (203-28)




## நிவாரணம் விநியோகம்

நாவற்குழி, ஜூலை 2

தனங்களப்பு மற்றும் மறவன்புலோ பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் நாவற்குழி முன்னூறு வீட்டுத் திட்டத்திலுள்ள தென்மராட்சி மேற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் தற்போது வழங்கப்பட்டுவருவதாகச் சங்கப் பொதுமுகாமையாளர் ந.குமாரதேவன் அறிவித்துள்ளார். (203-288)

## வெள்ளை அட்டை வழங்கப்படுகிறது

நாவலி, ஜூலை 2

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் உலக உணவுத் திட்ட நிவாரணம் பெறுபவர்களுக்கான வெள்ளை அட்டை தற்போது அந்தப் பிரிவுபதில் கிராம சேவையாளரால் வழங்கப்பட்டுவருகிறது. (203- 100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி கிருஸ்ணபிள்ளை போகாம்பிகை

கருங்காலி, காரைநகரைச் சேர்ந்த திருமதி கிருஸ்ண பிள்ளை போகாம்பிகை 30.06.2008 திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
*கருங்காலி, காரைநகர்.* (C-553562) குடும்பத்தினர்.

# துயர்பகிர்கின்றோம்



எமது நிறுவன இணைப்பாளராகிய
ந.சுகிர்தராஜ அவர்களின்
பாசமிகு தந்தை

## இ.நடராஜா

(இளைப்பாறிய தபால் அதிபர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள்,
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்.
(75981)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



*02.06.2008 திங்கட்கிழமை*
*இறைவனடி சேர்ந்த எமது*
*அன்புத் தெய்வம்*

## திருமதி பத்மாவதி தேவராஜா

*அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (02.07.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.*

*இந்த நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதன்பின் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

38, யாழ்.வீதி,
யாழ்ப்பாணம். (சி/553548) குடும்பத்தினர்.

# ஓடுகள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஓடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: க.சிவபாலன்
முருகமூர்த்தி கோயில் வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய்.
T.P.:0214591292 (75969)

# கமரா கைமாறிவிட்டது

29.06.08 ஞாயிறு சர்வதேச இந்து குருமார் ஒன்றிய கலாசாலையில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் விழாவின் போது டிஜிற்றல் கமரா ஒன்று தவறுதலாக கைமாறி எடுக்கப்பட்டுள்ளது. எடுத்தவர்கள் தயவு செய்து குருகுல காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். நிர்வாகம்.

# தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியருக்குக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ்.வலயத்தில் தற்காலிக இணைப் புப் பெற்ற வெளி மாவட்ட ஆசிரியர்களுக்கான ஜூன் மாத சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழைச் சம்பளப் பகுதியில் சமர்ப்பித்துச் சம் பளப் பட்டியலில் ஒப்பமிடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த வழமையான நடைமுறை பூர்த்தி செய்யப்பட்ட பின்பே உரியவர்களின் வங்கிக் கணக்கிற்குக் காசோலை அனுப்பி வைக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-302)

# மரண அறிவித்தல்

## திருமதி சீத்தாலட்சுமி கதிர்காமு

கரணவாய் தெற்கு, கரவெட்டியை வதிவிடமாகக் கொண்ட சீத்தாலட்சுமி கதிர்காமு நேற்று (01.07.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கதிர்காமுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மகேந்திரன், தெய்வேந்திரன் மற்றும் பாலேந்திரன், நாகேந்திரன், இராஜேந்திரன், குலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2008) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"இந்திர பவனம்",*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.* (75980) *தகவல்:* குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
## வைத்திலிங்கம் சரஸ்வதி

மண்ணுலகில்
05.07.1942

விண்ணுலகில்
02.06.2008

அன்பின் இருப்பிடமாய் பண்பின்
சிறப்பிடமாய்
பாசமுடன் இணைந்த இனிய
உங்கள் முகம்
எங்கள் நெஞ்சை விட்டகலாது

கடந்த 02.06.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவான இன்று (02.07.2008) புதன்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*காளி கோயிலடி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (75961) குடும்பத்தினர்.

# வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி
# கேள்வி அறிவித்தல் - 2008

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் (SEMP II) 2008 நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டட வேலைகளை பூர்த்தி செய்ய வலயக் கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.

1. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும், பதிவுப் புத்தகம் 2008ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரங்களின் பெறுமதி சேர்வரி (Vat) 15% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்வரி (Vat) 15% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
3. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக் காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 03.07.2008 ஆம் திகதியிலிருந்து 11.07.2008ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை தென்மராட்சிக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | பாடசாலையின் பெயரும், வேலை விவரமும் | மீளளிக்க முடியாத வைப்புப் பணம் | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01. | யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. விஞ்ஞான ஆய்வுகூடம் நிர்மாணித்தல் (40' X 25') | 750.00 | 22000.00 | M7 |

4. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப் பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப் பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையில் இடப்புற மேற் பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு முன்னர் இடப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப. 11.30 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
5. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பாடசாலை வேலைகள் கிளை**
*வலயக் கல்வி அலுவலகம்,*
*தென்மராட்சி, சாவகச்சேரி.* (C-553561)

**திரு.கு.பிரேமகாந்தன்**
*வலயக் கல்விப் பணிப்பாளர்,*
*தென்மராட்சி.*

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## வீதி வேலைக்கான கேள்வி அறிவித்தல் - 2008

கீழ்க்குறிப்பிட்ட வீதி வேலைகளுக்கு யாழ்ப்பாண மாநகர சபையில் 2008 ஆம் ஆண்டிற்கு பதிவுசெய்துள்ள வலுவுள்ள (ICTAD) நிர்மாண பயிற்சி நிறுவனத்தின் பதிவுள்ள வற்வரி செலுத்தும் மிகத்தகைமையுடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் 2008.07.15 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை வழங்கப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் 2008.07.16 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

3.கேள்விகள் யாவும் 2008.07.16 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வீதியின் பெயருடன் *வீதி வேலைக்கான கேள்வி என எழுதி மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்* என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது இதற்கான ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிலோ நேரடியாக சமர்ப்பிக்கப்படவேண்டும்.

5. இவ்வீதி செப்பனிடலுக்குத் தேவையான தார் ஒப்பந்தகாரராலேயே மாநகர சபை களஞ்சியத்துக்கு வழங்கப்பட்டு பதிவுகளை மேற்கொள்ளப்பட்டு பின் மீளப்பெற்று வீதி வேலை செய்யப்படவேண்டும்.

6.மேலதிக விவரங்களை யாழ்.மாநகர சபையின் நல்லூர் இந்து விடுதியில் அமைந்துள்ள வீதி வேலைப் பகுதி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இல | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக்குறைந்த பதிவுத்தரம் | மீளளிக்கூடிய கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கமுடியாத கேள்வி வைப்புப் பணம் (வற்வரி நீங்கலாக) | வற் |
|---|---|---|---|---|---|
| 1 | பொம்மைவெளி வீடமைப்புத் திட்ட வீதி தாரிட்டு செப்பனிடல். | M7 | 30000.00 | 3000.00 | 450.00 |
| 2 | கொழும்புத்துறை 3 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள 2 ஆம் ஒழுங்கையும் குறுக்கு ஒழுங்கையும் தாரிட்டு செப்பனிடல். | M8 | 20000.00 | 2000.00 | 300.00 |

குறிப்பு: வேலைகள் யாவற்றையும் 2008.09.21 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்படவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(மு.செ.சரவணபவ)
(C-553548) மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் உடுவில் பிரதேச செயலக அணியும் மோதிக்கொள்ளும் காட்சிகள். *(படங்கள்: நேசன்)*

# மாவட்ட மட்டத்திலான உதைபந்தாட்டத்தில் உடுவில் பிரதேச அணி சம்பியனாகத் தெரிவு

வலி.வடக்கு,ஜூலை2

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணி மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியும், உடுவில் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஓர் அணிக்கு மற்றைய அணி சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில் மோதின.

இரு அணிகளும் ஆட்டம் தொடங்கிய நேரம் முதல் முடிவடையும் வரை சளைக்காது போராடின.

இந்த அணி இரண்டினதும் வீரர்கள் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற பல போட்டிகளில் எதிர் எதிராக விளையாடியவர்கள் என்பதும் கூடச் சுட்டிக்காட்டவேண்டும்.

இதேபோன்று ஓர் அணியில் இருந்து மறு அணிக்குச் சென்று விளையாடிய வீரர்களும் இடம்பெற்று இருந்தமையால் போட்டி ரசிகர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் பெரு விருந்தாகவும் உற்சாகமாகவும் இந்த ஆட்டம் அமைந்திருந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணிவீரர் ஒருவர் தவறுதலாக விளையாடியமைக்காக மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டார்.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறும் பெரு முயற்சிகளை எடுத்துக்கொண்டபோதும் பின்னணி வீரர்கள் தமது பொறுப்புணர்ந்து விளையாடியமையால் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்து.

இரண்டாவது பாதி ஆட்டம் இரு அணிகளும் கோல்கள் பெறவேண்டும் என்ற ஆவலுடன் ஆரம்பமாகியது. இரு அணிகளின் முன்னணி வீரர்களும் எதிரணியினரின் கோல் பகுதியில் அடிக்கடி ஆக்கிரமித்துக் கோல்கள் பெறும் தமது இலக்கிற்காக பெரு முயசிகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் உடுவில் பிரதேச செயலக அணி தனது ஒரு வீரரை மாற்றி இளம் வீரர் ஒருவரை களமிறக்கியது. பாடசாலை மாணவரான இவ்வீரர் மிகவும் உற்சாகமாக முன்னணியில் விளையாடினார்.

எதிரணி வீரர்கள் கொண்டு சென்ற பந்தைத் தடுத்து விளையாடிய உடுவில் பிரதேச செயலக பின்னணி வீரர் உதைத்த பந்தைப் பெற்றுக்கொண்ட முன்னணி வீரரான ரவீந்திரன் பார்த்தீபன் உரிய முறையில் பந்தைப் பெற்று கோப்பாய் பிரதேச செயலக அணியின் கோல் கம்பத்தை நோக்கி அடித்து ஒரு கோலை பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இரு அணிகளினதும் விளையாட்டு மிகவும் சூடு பிடித்து வேகத்துடன் கூடிய விளையாட்டாக மாறியது. இந்நிலையில் மீண்டும் கோப்பாய் பிரதேச செயலக அணி வீரர் ஒருவர் மஞ்சள் அட்டை காட்டி மத்தியஸ்தரினால் எச்சரிக்கை செய்யப்பட்டார்.




தொடர்ந்து கோப்பாய் பிரதேச செயலக அணியினர் உடுவில் பிரதேச செயலக அணியின் கோல் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டே இருந்தார்கள்.

இந்நிலையில் கோப்பாய் பிரதேச செயலக அணியினர் தலையால் இடித்து ஒரு கோலைப் பெற்றுக்கொண்டார்கள் என்று ரசிகர்கள் பார்த்தவேளையில் உடுவில் பிரதேச செயலக அணியின் கோல் காப்பாளர் எதிர்பாரா வண்ணம் குறிப்பிட்ட பந்தை தடுத்து நிறுத்தியதைத் தொடர்ந்து அந்த வாய்ப்பும் இழக்கப்பட்டது.

தொடர்ந்து இரு அணிகளும் கோல்கள் பெறுவதற்கான பெரு முயற்சியை மேற்கொண்டிருந்த அதேநேரம் ரசிகர்களும் ஆதரவாளர்களும் கூட உற்சாக மிகுதியினால் நேரம் போவதினால் பெரும் பரபரப்புக்குள்ளாகினார்கள்.

ஆட்டம் உரிய நேரத்தில் முடிவடைந்த போது உடுவில் பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல் கணக்கில் கோப்பாய் பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டு மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்டப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (1-86)

## தாச்சிச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை2

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்க அனுசரணையுடன் யூனியன் அசூரன்ஸ் நிறுவன ஆதரவில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி சென்.றோக் வி.கவும் மயிலிட்டி நியூகிட் வி.கவும் மோதவிருக்கின்றன. (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## காவலூர்ப் பகுதி பெரு விளையாட்டு இறுதிக்கட்டத்தில்

ஊர்காவற்றுறை,ஜூலை2

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பெருவிளையாட்டுப் போட்டிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன.

இறுதிப்போட்டியாக பெண்களுக்கான வலைபந்தாட்ட ஆட்டங்கள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்றன.

இவ்வாரம் முதல் தடகளப் போட்டிகள் இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

# பாடசாலைகள் உதைபந்தாட்டம்: அரையிறுதிக்கு முன்னேறியது

யாழ்ப்பாணம்,ஜூலை2

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அரையிறுதி ஆட்டத்துக்கு வந்துள்ளது.

அரையிறுதி ஆட்டங்களில் பங்குகொள்ளத் தெரிவாகியுள்ளன.

ஒரு பிரிவில் - தேவரையாளி இந்துக் கல்லூரியும் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் -

மற்றைய பிரிவில் சென்.ஜேம்ஸ் ம.வியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் - மோதுகின்றன.

அரையிறுதி ஆட்டங்கள் அடுத்த வாரமளவில் இடம்பெறவிருக்கின்றன. (1)

# சமாதான உதைபந்தாட்டம்: வடமராட்சியில் ஞாயிறு ஆரம்பம்

கரவெட்டி, ஜூலை 3

வடமராட்சியில் சமாதான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கும் பருத்தித்துறை இளைஞர் கிறிஸ்தவ சங்கமும் இணைந்து தேசிய கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் அனுசரணையுடன் இச்சுற்றுப்போட்டியை நடத்துகின்றன.

வடமராட்சியைச் சேர்ந்த லீக்கில் பதிவு செய்த கழகங்களின் அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் விலகல் முறையில் ஏழு வீரர்களைக் கொண்டதாக அமையவிருக்கின்றன.

எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகும் சுற்றுப்போட்டி அடுத்தமாதம் 11ஆம் திகதி வரை இடம்பெறும். (1-70)

# போட்டிகளில் கேடயங்களை தமதாக்கிய வீரர், வீராங்கனைகள் இங்கே...



பருத்தித்துறை இலங்கை வங்கியின் பொன்விழாவையொட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டிப் பரிசளிப்பு விழாவிலே பிரதம விருந்தினராக் கலந்துகொண்ட இலங்கை வங்கி வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.சிவரட்ணம் சம்பியனான கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிக்கிண்ணம் வழங்கும்போது. *(1-218)*



தென்மராட்சி பிரதேச விளையாட்டு அண்மையில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்ற மட்டுவில் வளர்மதி வி.கழகத்திற்கான கேடயத்தினை அரச அதிபர் கே.கணேஷ் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: தென்னவன்)*



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகாதேவா வீராங்கனை ஒருவருக்கு வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் கல்லூரி அதிபர் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலத்தில் ரயில் தடம் புரண்டதில் 4 பேர் பலி; இருபது பேர் காயம்

கொழும்பு, ஜூலை 02

அநுராதபுரத்திலிருந்து மாத்தறை நோக்கிச் சென்ற ரயில் நேற்று முன்தினம் பாலம் ஒன்றைக் கடக்கும் தடம்புரண்டதன் காரணமாக 4 பயணிகள் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் போது உயிர் தப்புவதற்காக ரயிலில் இருந்து மேலும் பல பயணிகள் பாலத்தின் கீழே பாயும் ஆற்றில் குதித்தனர் என்றும் –

அப்படிக் குதித்தவர்களில் சிலரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

சீனிகமவிற்கும் ஹிக்கடுவைக்குமிடையில் உள்ள பாலம் ஒன்றின் மேலால் ரயில் செல்லும் போதே இந்த விபத்து இடம் பெற்றது என்று அறியவந்தது.

காலை 9 மணியளவில் அநுராதபுரத்தில் இருந்து புறப்பட்ட இந்த ரயில் பிற்பகல் 12.45 மணியளவில் விபத்துக்குள்ளானது என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட பாலத்தைக் கடக்கும் போது ரயில் திடீரென தண்டவாளத்தை விட்டு விலகி இரண்டாகப் பிரிந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்போது ரயில் பெட்டியில் சிக்கி இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர் என்றும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின் மேலும் இருவர் உயிரிழந்தனர் என்றும் தெரியவருகின்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் உயிர் தப்புவதற்காக ரயிலில் இருந்த மேலும் பல பயணிகள் பாலத்திற்கு கீழே ஓடுகின்ற ஆற்றில் குதித்திருக்கின்றனர். அது ஆழமான ஆறாக இருப்பதால் குதித்தவர்களில் சிலர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இவர்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விபத்தின் காரணமாக ஹிக்கடுவை முதல் அம்பலாங்கொடை வரையிலான ரயில் போக்குவரத்துஇடைநிறுத்தப்பட்டிருந்தது.

(அ-சி)

## பிரான்பற்று கலைமகள் ச.ச.நிலையத்திற்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 02

பண்டத்தரிப்பு- பிரான்பற்று கலைமகள் சனசமூக நிலையத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

இந்த நிதி மூலம் விரைவில் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம்இடம்பெறவுள்ளது.

இதற்கானஆரம்ப கட்டடவேலையினை மானிப்பாய் பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றதாக பிரான்பற்று கலைமகள் ச.ச.நிலைய தலைவர் சி.மகேந்திரன் தெரிவித்தார்.

(203-95)

## வடக்கில் இடம்பெற்ற மோதல்களில் மூன்று படையினர் பலி; 13 பேர் காயம்

கொழும்பு, ஜூலை 02

வடக்கின் போர்முனைகளில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஞாயிறன்று இடம் பெற்ற மோதல்களின் போது இராணுவத்தினர் மூவர் உயிரிழந்தனர் என்றும் 13 பேர் படுகாயமடைந்தனர் என்று படை தரப்பு கூறப்பட்டது.

அன்றைய தினம் பரவலாக இடம் பெற்ற மோதல்கள் தொடர்பாக படைத்தரப் பில் வெளியிட்டத் தகவல்கள் வருமாறு:-

வவுனியா முன்னரங்க நிலையங்க ளில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளில் 13 பேர் உயிரிழந்தனர் ,12 பேர் வரை காயமடைந்தனர். படைத்தரப்பில் மற்றுமொருவர் காணாமற் போயுள்ளனர். மேலும் அறுவர் படுகாயமடைந்தனர்.

மணலாறு முன்னரங்க நிலைகளில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் 12பேர் உயிழந்தனர். 33 பேர் காயமடைந்தனர். படைத்தரப்பில் ஒருவர் உயிழந்ததால் ஏழு பேர் வரை படுகாயம டைந்தனர்.

இம்மோதல்கள் தொடர்பாக விடுத லைப் புலிகள் தரப்பில் இருந்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (சி)

## தொழிற் பயிற்சி நிலையத்திற்கு காணி அன்பளிப்பு

பிரான்பற்றில் அமையவுள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு பிரான்பற்று மக்கள் இணைந்து 2 1/4 பரப்புக் காணியை இலவசமாக வலி.தென்மேற்குப் பிரதேச செயலருக்கு வழங்கியுள்ளனர்.

பிரான்பற்று மக்கள் நலன்புரி சங்கத்தின் தலைவர் சி.மகேந்திரம், செயலாளர் க.கிருஷ் ணலிங்கம் ஆகியோர் இணைந்து வழங்கியுள்ளனர்.

விரைவில் ஏழு மில்லியன் ரூபா செலவில் புதிய பயிற்சி நிலையம் அமைக் கப்படவுள் எதாகக் கூறப்பட்டுள்ளது.

புதியகட்டடக்நிர்மாணிப்புக்கான வேலைத் திட்டங் களை சண்டிலிப் பாய் பிரதேச செய லர் திருமதி ரூபினி வரதலிங்கம் மேற் கொண்டுள்ளார். (203-95)


**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

(75826)


## நெஞ்சுருகி அஞ்சலிக்கின்றோம்



சமூக சேவைக்கு இலக்கணமாய் திகழ்ந்த எங்கள் உலகம் போற்றும் அன்னை

*சிவத்தமிழ்ச்செல்வி*

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களது பாதம் பணிந்து எமது அஞ்சலியை சமர்ப்பித்து நிற்கின்றோம்.

மகளிர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தினர்,
அளவெட்டி வடக்கு,

(75966)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**முத்துலக்சுமி நவரட்ணம்**

மலர்வு
25.08.1936

உதிர்வு
14.07.2007

திதி: 02.07.2008

உமது புன்முறுவல் பூத்த வதனம் கண்டு
ஆண்டு ஒன்று ஓடி மறைந்ததம்மா!
மெழுகுபோல் உம்மை உருக்கி
எம்மைக் காத்து குடும்ப சுமையைச் சுமந்த
எமது அன்புத் தாயே!
தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை என்று
உமது பிரிவால் வாடித் தவிக்கின்றோம் அன்புத் தெய்வமே!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி,
உறவினர், நண்பர்கள்.

84/1 A, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை.

(75965)


வசீகர தோற்றத்திற்கு

**சந்தனாலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப் பட்டை, கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடை தலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமச் சுருக்கதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.

சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

*யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்*
**'சிவா நறுமணப் பூங்கா'**
*288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

*சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.*

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO A/L 250


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா கிட்டப்பா**

*(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)*

மலர்வு
02✱10✱1925

உதிர்வு
25✱06✱2006

திதி: 02.07.2008

அன்பு கொண்ட எங்கள் ஐயாவே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
இனிய உறவாய் நீங்கள் இல்லையே!
ஈசனடி சேர்ந்து ஈராண்டுகள் சென்றாலும்
உள்ளத்தில் உங்கள் நினைவு மட்டும்
மறையாமல் எம்முடன் வாழ்ந்து நிற்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*இல.81, மயிலணி,
சுன்னாகம்.*
*(75955)*


**eTouch COMPUTER SYSTEM**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

சனி, ஞாயிறு தினங்களில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கணனிப் பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது

| | | | |
|---|---|---|---|
| Diploma in Office Automation | 03 Months | 2500 | Batch 1 02-07-2008 |
| Diploma in Desktop Publishing | 04 Months | 2500 | |
| Diploma in Auto CAD Programming | 04 Months | 3000 | |
| Diploma in Hardware Engineering | 04 Months | 3000 | Batch 2 04-07-2008 |
| Diploma in Multimedia | 04 Months | 3000 | |
| Diploma in Visual Basic | 03 Months | 2500 | |
| Diploma in Kids Programming | 12 Months | 4500 | Batch 3 06-07-2008 |
| Certificate in Internet & E-Mail | 10 Hours | 1500 | |

**05-07-2008 ற்கு முன்பாக பதிவுகளை மேற்கொள்ளவும்**

ONLINE Computer Education @ Affordable Price with **Standard Course Materials**

2nd Lane, உடுவில் வீதி, மருதனார்மடம். ☎ 021 4590222


## 31ம் நாள் நினைவஞ்சலி



அவனியில் 23 - 01 - 1915

அவனிடம் 31 - 05 - 2008

**அமரர். திரு. செல்லையா நடராஜா**



அவனியில் 07 - 06 - 1924

அவனிடம் 02 - 06 - 2008

**அமரர். திருமதி. நடராஜா மகேஸ்வரி**

உரும்பிராய் ஞான வைரவர் வீதியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை இல. 42-3/2, அருத்துசா லேனை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா நடராஜா அவர்கள் 31-05-2008 சனிக்கிழமை அமரரானார். அவரைத்தொடர்ந்து அவரது அன்பு மனைவி திருமதி மகேஸ்வரி நடராஜா அவர்கள் 02-06-2008ல் காலமானார். அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் ஜூலை மாதம் 2ம் திகதி (இன்று) அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். அவர்களது மரணச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசியிலும், மின்னஞ்சல் மூலமாகவும், தமது பிரிவுத் துயரினைப் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர் நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர், 42-3/2 அருத்துசா லேன், வெள்ளவத்தை, கொழும்பு 06.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
மாறாது உங்கள் நினைவு
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா உங்களைப் போல் வருமா?
எங்கள் குடும்பத்தின் விளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

*உங்கள் நினைவுகளுடன்:*
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

*தகவல்:*
*திருமதி செல்வராஜா,*
'மனோன்மணி வாசா', ஆடியபாதம் றோட்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**அமரர் குமாரவேலு அருளம்பலம்**

பிறப்பு: 31.10.1934 இறப்பு: 29.06.2003

திதி: அமாவாசை (*02.07.2008*)

(75829)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு கல்விவலய ஆசிரிய ஆலோசகர் சங்க அனுசரணையுடன் கல்வி வளவாளர் நிலையம் அண்மையில் நடாத்திய

க.பொ.த (உயர்தர) முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்- ஒகஸ்ட், 2008

33 T II

# கணக்கீடு

1 மணித்தியாலம்

## கணக்கீடு-02, பகுதி - I

இல. 01 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதற்கு முன்னாலுள்ள கூட்டில் √ அடையாளம் இடுக.

01. பங்கு வழங்கலுக்கான பிரதிப்பயன் (Consideration for issue of share ) எனப்படுவது, (2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தின்படி)
 - ☐ 1) காசு, வாக்குறுதிப் பத்திரங்கள், எதிர்காலச் சேவைகள், ஏதேனும் வகையான ஆதனம் வேறு பிணைப் பொறுப்புகள்.
 - ☐ 2) காசுப் பெறுவனவுகள் மட்டும்.
 - ☐ 3) குத்தகைக்குப் பெறுதல் மட்டும்.
 - ☐ 4) மிகையாக விற்றல்.
 - ☐ 5) இவை அனைத்தும் அல்ல.

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி இல 02 - 04 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

**வரையறுத்த Robin கம்பனியானது ஒவ்வொன்றும் 50/= வான 50,000 சாதாரண பங்கு களைக் கூறப்பட்ட மூலதனமாகக் கொண்டுள்ளது. பங்குவழங்கல் நடைமுறையானது பின்வரு மாறு காணப்பட்டது. மனு 10/=; ஒதுக்கம் 20/=; அழைப்பு 20/= ஒதுக்கலின்போது 1000 பங்குகளைப் பெற்றுக்கொண்ட ஒருவர் பணம் செலுத்தத் தவறியிருந்தார். அழைப்பின் இறுதி யில் பங்குதாரருக்கு தகவல் அனுப்பப்பட்டு அவை 60/= விலையில் மீள் விற்பனை செய்யப் பட்டன. மீள் விற்பனைச் செலவு 5000/= ஏற்பட்டது. அத்துடன் ஒதுக்க நிலுவைக்கான வட்டி 1000/= வும் அழைப்பு நிலுவைக்கான வட்டி 500/= வும் தாக்கல் செய்யப்பட்டிருக் கிறது.**

02. மேற்குறித்த பங்குவழங்கலின்போது கிடைத்த மொத்தப் பணத்தொகையின் மீதி யாது?(வங்கிக் க/கு)
 - ☐ 1) ரூபா 1,500,000 ☐ 2) ரூபா 2,505,000 ☐ 3) ரூபா 3,000,000
 - ☐ 4) ரூபா 5,000,000 ☐ 5) ரூபா 2,500,000

03. கூறப்பட்ட மூலதனக் கணக்கில் காணப்படுகின்ற மூலதனத் தொகை யாது?
 - ☐ 1) ரூபா 1,200,000 ☐ 2) ரூபா 3,000,000 ☐ 3) ரூபா 2,503,500
 - ☐ 4) ரூபா 5,000,000 ☐ 5) ரூபா 4,500,000

04. பழைய பங்குதாரருக்குக் கொடுக்கப்படும் பணத்தொகை யாது?
 - ☐ 1) ரூபா 5,000 ☐ 2) ரூபா 3,500 ☐ 3) ரூபா 5,500
 - ☐ 4) ரூபா 10,000 ☐ 5) ரூபா 50,000

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி இல 05 - 09 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

**வரையறுத்த Robin கம்பனியின் 31.03.2007, 31.03.2008 இல் முடிவடையும் நிதி யாண்டுகளிற்கான சுருக்கப்பட்ட ஐந்தொகை பின்வருமாறு:**

| | 31.03.2008 | 31.03.2007 | | 31.03.2008 | 31.03.2007 |
|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 |
| கூறப்பட்ட மூலதனம் | 4,000 | 3,000 | ஆதனம், பொறி தேறியது | 3,600 | 3,000 |
| இலாபநட்டக் கணக்கு | 1,000 | 600 | தொக்குகள் | 1,600 | 1,200 |
| தொகுதிக்கடன் | 800 | 600 | கடன்படுநர் | 800 | 600 |
| வியாபாரக் கடன் கொடுநர் | 1,000 | 800 | காசுமீதி | 1,200 | 420 |
| செ லு த் த வே ண் டி ய | 200 | 100 | | | |
| பங்குலாபம் | 200 | 120 | | | |
| சென்மதி வரி | 7,200 | 5,220 | | 7,200 | 5,220 |

**மொத்த விற்பனைகள் 12,000,000/= , மொத்த கொள்வனவுகள் 11,600,000/=**
**2006/2007 ஆம் நிதியாண்டுக்கான பங்குலாபமும், வரியும் நடப்பாண்டில் செலுத்தப்பட்டன.**

05. 31.03.2008 இல் செயற்பாட்டு நடவடிக்கையால் உருவான காசு (நேர்முறையில் அமைத்த)
 - ☐ 1) ரூபா 120,000 ☐ 2) ரூபா 200,000 ☐ 3) ரூபா 180,000
 - ☐ 4) ரூபா 100,000 ☐ 5) ரூபா 280,000

06. 31.03.2008 இல் முதலீட்டு நடவடிக்கை மூலம் எழுந்த தேறிய காசுப்பாய்ச்சல்,
 - ☐ 1) ரூபா 200,000 ☐ 2) ரூபா 300,000 ☐ 3) ரூபா 500,000
 - ☐ 4) ரூபா 400,000 ☐ 5) ரூபா 600,000

07. 31.03.2008 இல் நிதி நடவடிக்கையால் எழுந்த தேறிய காசுப்பாய்ச்சல்,
 - ☐ 1) ரூபா 400,000 ☐ 2) ரூபா 800,000 ☐ 3) ரூபா 1,000,000
 - ☐ 4) ரூபா 1,100,000 ☐ 5) ரூபா 1,200,000

08. 31.03.2008 இல் காணப்பட்ட காசும், காசுக்கு சமனான அதிகரிப்பும்,
 - ☐ 1) ரூபா 240,000 ☐ 2) ரூபா 360,000 ☐ 3) ரூபா 480,000
 - ☐ 4) ரூபா 520,000 ☐ 5) ரூபா 780,000

09. 31.03.2008 இல் காணப்பட்ட விரைவுச் சொத்துக்கள் / திரவச் சொத்துக்களின் பெறுமதி,
 - ☐ 1) ரூபா 1,200,000 ☐ 2) ரூபா 600,000 ☐ 3) ரூபா 2,000,000
 - ☐ 4) ரூபா 1,120,000 ☐ 5) ரூபா 600,000


10. சராசரிக் கடன் சேகரிப்புக்காலம் பின்வருமாறு கணிக்கப்படுகிறது,
 - ☐ 1) நடைமுறைச்சொத்து/நடைமுறைப்பரிப்பு.
 - ☐ 2) விற்பனைக் கிரயம்/சராசரி புரள்வு.
 - ☐ 3) காலம் 365 நாட்கள்/வியாபார கடன்பட்டோன் புரள்வு விகிதம்.
 - ☐ 4) (கடன் விற்பனை/சராசரி கடன்பட்டோன்)× 365 நாட்கள்.
 - ☐ 5) கடன் விற்பனை /சராசரி வியாபார கடன்பட்டோன்.

11. பங்குலாப மீட்பு விகிதம் பின்வருமாறு கணிக்கப்படுகிறது,
 - ☐ 1) பங்கு ஒன்றுக்கான உழைப்பு/பங்கு ஒன்றுக்கான பங்குலாபம்.
 - ☐ 2) பங்கு ஒன்றின் சந்தைப் பெறுமானம்/பங்கு ஒன்றின் உழைப்பு.
 - ☐ 3) வரிக்குப் பின் இலாபம்/சாதாரண பங்குகளின் எண்ணிக்கை.
 - ☐ 4) பங்குலாபம்/சாதாரண பங்குகளின் எண்ணிக்கை.
 - ☐ 5) மேற்குறித்த அனைத்தும் அல்ல.

12. வரையறுத்தலால் கம்பனியின் 31.03.2008 இல் காணப்பட்ட நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 200,000/= ஆகும். இதனுள் ரூபா 40,000/= இறுதியிருப்பு அடங்கியுள்ளது. அத்துடன் நடைமுறைப் பொறுப்பு ரூபா 80,000/= ஆகும். இக் கம்பனியின் விரைவுவிகிதம் யாது?
 - ☐ 1) 4:1 ☐ 2) 2:1 ☐ 3) 1:1
 - ☐ 4) 1.8:1 ☐ 5) 2:3

13. வரையறுத்த பாரதி கம்பனியின் "X" பொருள் தொடர்பான தகவல் வருமாறு: வருடாந்த கேள்வி 10,000 அலகுகள், கட்டளையிடுதற் கிரயம் ரூபா 800, இருப்பு பேணல் கிரயம் அலகுக்கு வருடம் ஒன்றுக்கு ரூபா 400 ஆகும். உம்மிடம் வேண்டப்படுவது,
 - ☐ 1) ரூபா 30,000 ☐ 2) ரூபா 40,000 ☐ 3) ரூபா 80,000
 - ☐ 4) ரூபா 20,000 ☐ 5) ரூபா 10,000

14. அலகிற்கான நிலையான கிரயமானது, பின்வரும் வரிப்படம் மூலம் விளக்கப்படுகிறது?




பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 15ஆம்,16 ஆம் வினாக்களுக்கு விடைதருக.

| ஊழியர் | வாரமொன்றுக்கு அனுமதித்த நேரம் | எடுத்த நேரம் |
|---|---|---|
| அகிலன் | 40 | 40 |
| குமார் | 40 | 30 |

மணி வீதம் 30/= மிகைநேரக் கொடுப்பனவு கல்சி முறையில் அனுமதிக்கப்படின் ஊழியர்களுடைய மொத்தக்கூலியும், மிகையூதியமும் முறையே-

15. ஊழியர் அகிலனின் மொத்தக் கூலியும், மிகையூதியமும்
 - ☐ 1) ரூபா 1 200, ரூபா 80 ☐ 2) ரூபா 1 200, மிகையூதியம் இல்லை.
 - ☐ 3) ரூபா 1 200, ரூபா 40 ☐ 4) ரூபா 2 400 மிகையூதியம் இல்லை.
 - ☐ 5) இவை அனைத்தும் அல்ல.

16. ஊழியர் குமாரின் மொத்தக்கூலியும், மிகையூதியமும்
 - ☐ 1) ரூபா 1 050, ரூபா 150 ☐ 2) ரூபா 2 400, ரூபா 300
 - ☐ 3) ரூபா 3 000, ரூபா 100 ☐ 4) ரூபா 1 350, ரூபா 150
 - ☐ 5) ரூபா 1 500, மிகையூதியம் இல்லை.

17. ஊழியரின் மாத அடிப்படைச் சம்பளம் ரூபா 40 000, ஊழியர் சேமலாப நிதி ஊழியரின் பங்களிப்பு 8%, தொழில் தருநரின் பங்களிப்பு 12%, ஊழியரின் கடன் தவணைப் பண அறவீடு ரூபா 3 000 ஆகும். இந் நிறுவனத்தின் சம்பளமும் கூலிக் கட்டுப்பாட்டுக் கணக்கு தயாரிக்கும் வேளையில் அக் கணக்கின் ஊடான கூலிக்கொடுப்பனவு தேறிய தொகை யாது?
 - ☐ 1) ரூபா 15,400 ☐ 2) ரூபா 17,200 ☐ 3) ரூபா 33,800
 - ☐ 4) ரூபா 32,200 ☐ 5) ரூபா 20,000

18. மேந்தலை முதலாம் கட்டப் பகிர்வின்போது தொழிற்சாலை வாடகையும் ஊழியர்நலக் கொடுப்பனவும் பகிர்தல் அடிப்படையானது முறையே,
 - ☐ 1) தளப்பரப்பும், இயந்திரமணித்தியாலமும்.
 - ☐ 2) தளப்பரப்பும், ஊழியர் எண்ணிக்கையும்.
 - ☐ 3) இயந்திரமணித்தியாலமும், ஊழிய மணித்தியாலமும்.
 - ☐ 4) தளப்பரப்பும், வெளியீட்டு மட்டமும்.
 - ☐ 5) இவை அனைத்தும் அல்ல.

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 19ஆம், 20ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

**நிகால் கம்பனியின் இயக்குநர் சபையானது, 31.03.2008 இல் முடிவடைந்த ஆண்டு களிற்கான நிதிக் கூற்றுக்களை 01.07.2008 இல் பிரசுரிக்க அனுமதிக்கின்றது. 31.03.2008 இன் பின்னர் ஏற்பட்ட பல்வேறு நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன.**

**a ) கம்பனியின் 31.03.2007 இலுள்ளபடி முதலீடுகளின் கிரயம் ரூபா 500,000 ஆகும். இந்த முத லீடுகளின் 01.07.2008 இலுள்ளபடி சந்தைப்பெறுமதி ரூபா 600, 000 ஆகும்.**

**b ) ஐந்தொகை தினத்திலுள்ள ரூபா 20,000 பெறுமதியான கடன்பட்டோர் ஒருவர் 20.04.2008 இல் முறி வடைந்துள்ளவராக வெளிப்படுத்தப்பட்டுள்ளார்.**

**c ) இறுதிப் பங்குலாபமாக சாதாரண பங்குதாரருக்கு ரூபா 30,000/= பிரேரிக்கப்பட்டுள்ளது.**

**d ) ரூபா 400,000/= பெறுமதியான இயந்திரம் ஒன்று 20.07.2008 இல் தீயினால் முழுமையாக அழிக் கப்பட்டுள்ளது.**

19. இலங்கை கணக்கீட்டு நியமம் இல.12 இன்படி ஐந்தொகை தினத்தின் பின்னரான நிகழ்வுகள் பின் வருமாறு:
 - ☐ 1) a , b , c ☐ 2) a , b , c , d ☐ 3) a , b மாத்திரம்.
 - ☐ 4) c மாத்திரம். ☐ 5) a , c மாத்திரம்.

20. இலங்கை கணக்கீட்டு நியமம் இல.12 இன்படி ஐந்தொகை தினத்தின் பின்னரான சீராக்கம் செய்யக் கூடிய நிகழ்வு/நிகழ்வுகள் பின்வருமாறு:
 - ☐ 1) a மாத்திரம். ☐ 2) b மாத்திரம். ☐ 3) c மாத்திரம்.
 - ☐ 4) d மாத்திரம். ☐ 5) a , b மாத்திரம்.

**இல. 21 - 25 வரையான கூற்றுக்கள் 'சரி' எனவும், அல்லது 'பிழை' எனவும் குறிப்பிடுக.**

21. செயற்பாட்டு நடவடிக்கை மட்டத்தில் மாற்றம் ஏற்படினும் அலகு ஒன்றிற்கான மாறும் கிரயம் மாறா திருக்கும். ( )
22. உற்பத்தி மேந்தலைகள் எனப்படுபவை, உற்பத்திப் பொருளுடன் இலகுவாக அடையாளம் காண முடியாத பொருட்கள், கூலி, ஏனைய செலவுகளை உள்ளடக்கியவை. ( )
23. சமப்பாட்டுப் புள்ளியில் மொத்தப் பங்களிப்பானது மொத்த நிலையான கிரயத்துக்குச் சமமாகும். ( )
24. எல்லா மாறும் கிரயங்களுள் நேர்க்கிரயமும் உள்ளடங்கும். ( )
25. செயற்றிட்டங்களை மதிப்பிடும்போது தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV) முறையில் தேறிய இலாபமே கருத்திற்கொள்ளப்பட்டு காசு உட்பாய்ச்சலாக மதிப்பிடப்படுகின்றது. ( )

**இல. 26 - 40 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

26. இறுதிப் பங்குலாபம் வெளிப்படுத்தப்படும் முறைகளாவன,
 1) ..............................
 2) ..............................
27. 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு, கணக்காய்வுச் சட்டத்தின்கீழ் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் தயாரிப்பதற்கு எந்நிறுவனம் பொறுப்புடையது?
 ..............................
28. சிக்கன கட்டளைத்தொகை (E.O.Q) மாதிரியின் இரண்டு எடுகோள்களை எழுதுக.
 1) ..............................
 2) ..............................
29. பின்வரும் ஆவணங்களை வழங்கும் பிரிவு, பெற்றுக்கொள்ளும் பிரிவு ஆகியவற்றைக் குறிப்பிடுக.

| ஆவணம் | வழங்கும் பிரிவு | பெற்றுக்கொள்ளும் பிரிவு |
|---|---|---|
| கொள்வனவு வேண்டுதல் பத்திரம் | .................... | .............................. |
| களஞ்சிய வேண்டுதல் பத்திரம் | .................... | .............................. |

30. இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல. 9 இற்கமைய நிதி நடவடிக்கைகள் என்பதை வரையறுக்குக.
 ..............................
 ..............................
 ..............................
31. சரக்கிருப்பு தொடர்பாகக் கிரயம் என்பது,
 ..............................
 ..............................
 ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
32. இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல. 5 இன்படி வெளிப்படுத்தப்படும் அம்சங்கள் இரண்டு தருக.
 1) ..............................
 2) ..............................
33. இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல. 10 இற்கமைய முன்னையகால வழுக்கள் என்பதை வரை யறுக்குக.
 ..............................
 ..............................
 ..............................
34. இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல.18 இற்கமைய ஆதனம் பொருத்து, உபகரணத் தொடர்பாகச் செய்யப்பட்ட பிந்திய செலவுகள் இரண்டு தருக.
 1) ..............................
 2) ..............................
35. இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல.36 இற்கமைய ஏற்பாடுகள் என்பதை வரையறுக்குக.
 ..............................
 ..............................
36. இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல.36 இற்கமைய ஏற்பாடு தொடர்பான வெளிப்படுத்தல்கள் நான்கு தருக.
 1) ..............................
 2) ..............................
 3) ..............................
 4) ..............................
37. இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல.36 இற்கமைய நிகழத்தக்க பொறுப்புத் தொடர்பாக நிதிக்கூற்றுக் களில் வெளிப்படுத்தப்படும் நான்கு அம்சங்களைத் தருக.
 1) ..............................
 2) ..............................
 3) ..............................
 4) ..............................
38. வரையறுத்த புஷ்பா கம்பனியின் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் வருமாறு:

| | |
|---|---|
| **அலகுக்கான விற்பனை விலை** | ரூபா 13 |
| **அலகுக்கான எல்லைக் கிரயம்** | ரூபா 9 |
| **நிலையான கிரயம்** | ரூபா 90,000 (ஆண்டு) |
| **எதிர்பார்த்த விற்பனை அலகுகள்** | 30,000 எனின், |

 சமப்பாட்டு புள்ளியில் அலகுகள் ..............................
 பாதுகாப்பு எல்லை அலகுகள் ..............................
39. செயற்றிட்டங்களை மதிப்பிடும்போது நிதிக் காரணியற்ற விடயங்கள் இரண்டு தருக.
 1) ..............................
 2) ..............................
40. செயற்றிட்ட காசு உட்பாய்ச்சலில் இரண்டு விடயங்களையும், காசு வெளிப்பாய்ச்சலில் இரண்டு விடயங்களையும் தருக.
 காசு உட்பாய்ச்சல் 1) ..............................
 2) ..............................
 காசு வெளிப்பாய்ச்சல் 1) ..............................
 2) ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 மாணவர்களுக்காக
## ஆசிரியர் பி.அம்பிகைபாகன் தொகுத்து வழங்கும்
## புலமை இலகுவழி பயிற்சிப்பரீட்சை

01. அட்டவணையில் தரப்பட்டுள்ள இலக்கங்களை ஏறுவரிசைப்படுத்தியும், இறங்குவரிசைப்படுத்தியும் எழுதுக.

| | இலக்கங்கள் | ஏறுவரிசை | இறங்குவரிசை |
|---|---|---|---|
| உ+ம் | 9, 3, 7, 5 | 3, 5, 7, 9 | 9, 7, 5, 3 |
| 1. | 4, 3, 8, 2 | .......... | .......... |
| 2. | 9, 6, 5, 8 | .......... | .......... |
| 3. | 2, 4, 3, 1 | .......... | .......... |
| 4. | 9, 5, 8, 6 | .......... | .......... |
| 5. | 2, 5, 7, 3 | .......... | .......... |

02. அட்டவணையில் தரப்பட்டுள்ள இலக்கங்களால் ஆக்கப்பட்ட எண் மிகப்பெரிய எண்ணாயின், ''சரி'' எனவும் இல்லையெனில் சரியான மிகப்பெரிய எண்ணையும் எழுதுக.

| | இலக்கங்கள் | எண் | ''சரி'' அல்லது பெரிய எண் |
|---|---|---|---|
| உ+ம் | 2, 4, 3, 1 | 4321 | சரி |
| | 9, 5, 8, 6 | 9685 | 9865 |
| 1. | 7, 2, 4, 8 | 7428 | ........ |
| 2. | 6, 7, 3, 8 | 6837 | ........ |
| 3. | 2, 1, 9, 6 | 9621 | ........ |
| 4. | 4, 6, 3, 8 | 8643 | ........ |
| 5. | 7, 4, 2, 9 | 2479 | ........ |

03. அட்டவணையில் தரப்பட்டுள்ள இலக்கங்களால் ஆக்கப்பட்ட எண் மிகச்சிறிய எண்ணாயின், ''சரி'' எனவும் இல்லையெனில் சரியான மிகச்சிறிய எண்ணையும் எழுதுக.

| | இலக்கங்கள் | எண் | ''சரி'' அல்லது சிறிய எண் |
|---|---|---|---|
| உ+ம் | 2, 4, 3, 1 | 1234 | சரி |
| | 9, 5, 8, 6 | 5869 | 5689 |
| 1. | 7, 2, 4, 8 | 8742 | ............ |
| 2. | 6, 7, 3, 8 | 8736 | ............ |
| 3. | 2, 1, 9, 6 | 9126 | ............ |
| 4. | 4, 6, 3, 8 | 3468 | ............ |
| 5. | 7, 4, 2, 9 | 9742 | ............ |

04. கீழே தரப்பட்டுள்ள உவமைச் சொற்றொடர்களைப் பயன்படுத்தி கருத்துள்ள வாக்கியங்கள் ஆக்குக. வாக்கியங்கள் உவமைச் சொற்றொடருடன் மிகவும் பொருந்தக்கூடியதாக இருத்தல்வேண்டும். உதாரணம் ஒன்று தரப்பட்டுள்ளது.


உதாரணம்:-
அணைகடந்த வெள்ளம்போல - அதிபர் மேடையேறிப் பேசத்தொடங்கி விட்டால் அணைகடந்த வெள்ளம்போல் கருத்துள்ள சொற்கள் பெருகிக் கொண்டே இருக்கும்.

1) உடுக்கை இழந்தவன் கைபோல
..........................................................................
2) இலைமறை காய்போல
..........................................................................
3) சிலையில் எழுத்துப்போல
..........................................................................
4) நகமும் சதையும்போல
..........................................................................
5) சுழல்காற்றில் அகப்பட்ட துரும்புபோல
..........................................................................
6) கூலிக்கு மார் அடித்தல்போல
..........................................................................
7) சூரியனைக்கண்ட பனிபோல
..........................................................................
8) கரும்புதின்னக் கைக்கூலி கேட்பதுபோல
..........................................................................
9) நடுவூரில் நல்லமரம் பழுத்ததுபோல
..........................................................................
10) வைக்கோற்பட்டறை நாய்போல
..........................................................................

05. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

1) கண்ணாடிப் பாத்திரம் ஒன்றில் சிறிய பனிக்கட்டித்துண்டை இட்டு அப்பாத் திரத்தில் நீரை நிரப்பினால், அப்பனிக்கட்டியின் அமைவை சரியாகக் காட்டும் உரு பின்வருவனவற்றுள் எது?


1. 2. 3. 4.



2) அருகில் தரப்பட்டுள்ள ஆணி உபகரணம் ஒன்றில் பொருத் தப்பட்டுள்ளது. அந்த ஆணியைக் கழற்றுவதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகப்பொருத்தமான உபகரணம் பின்வருவனவற்றுள் எது?




1. 2. 3. 4.



3) மெல்லிய இழை ஒன்றினால் காந்தம் ஒன்று கட்டித்தொங்கவிடப்பட்டுள்ளதை உரு - 1 காட்டுகிறது. குறித்த ஒரு பொருளைக் காந் தத்தின் அருகில் கொண்டுவந்தபோது, காந்தத்தின் நிலையை உரு - 2 காட்டுகிறது. அப்பொருள் பின்வருவனவற்றுள் எது?


1. பிளாஸ்டிக் துண்டு.
2. இரும்புத்துண்டு.
3. பித்தளைத்துண்டு.
4. அலுமினியத்துண்டு.




06. ''அ'' பகுதியிலுள்ள வினாக்களுக்கு பொருந்தக்கூடிய விடைகளை ''ஆ'' பகுதியுடன் தொடர்புபடுத்துக.

| ''அ'' | ''ஆ'' |
|---|---|
| 1) ஓயாகே தாத்தா மொனவத கரன்னே? | மட்ட கெமதி பாடங் தெமில. |
| 2) ஓயாகே கெமதி கேம மொக்கத? | மட்ட சகோதரயக் னா. |
| 3) ஓயாகே கெமதி பாடங் மொக்கத? | மகே தாத்தா குருவரயா. |
| 4) ஓயாட கீதய சகோதரயக் இன்னே? | மட்ட கெமதி கேம கிரிபத். |

07. அருகில் தரப்பட்டுள்ள சதுரமுகியை அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்குக.
இச்சதுரமுகியின்,




1) விளிம்புகள் எத்தனை? (......................)
2) உச்சிகள் எத்தனை? (......................)
3) முகங்கள் எத்தனை? (......................)
4) முகமொன்றின் ஒருபக்கநீளம் 28செ.மீ ஆகும். அதனது முகம் ஒன்றின் பரப்பு?(............. சதுர.செ.மீ)
5) நிறை 425 கிராம் எனின், இதையொத்த ஆறு சதுரமுகிகளின் நிறை யாது?( .............கிலோ.கிராம் )

08. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியாயின் ''சரி'' எனவும், பிழையாயின் ''பிழை'' எனவும் எதிரே தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

1) வீதியைக் கடந்துசெல்லும்போது முதலில் வலப்பக்கமும், இரண்டாவதாக இடப்பக்கமும் பார்த்து மீண்டும் வலப்பக்கம் பார்த்து விரைவாகக் கடந்துசெல்லவேண்டும். ( ............... )
2) முண்டத்தை நிமிர்த்திவைத்து கைவிரல்களை முஷ்டியாக மடித்து தொடையில்தொடுமாறுவைத்து கால்களை அருகே வைத்துச் சமநிலையில் நிற்றல் இலகுவாய் நிற்றல் எனப்படும். ( ............... )
3) வர்ணங்களைத் தெளித்தல் மூலம் படங்களை உருவாக்குதல் ஸ்ரென்சிலாக்கம் என்று அழைக்கப்படும். ( ............... )
4) மின்னல் மின்னும்வேளைகளில் முதலில் இடி இடிக்கும் சத்தம்கேட்டு பின்னர் பிரகாசமான ஒளி தென்படும். ( ............... )
5) பக்ஸ் இயந்திரம் (தொலைநகல்) மூலம் சொற்களை மட்டுமன்றி உருவங்களுடன் செய்தியையும் அனுப்ப முடியும். ( ............... )

09. கமலாவின் வீட்டுச்சூழல் கீழேயுள்ள கோட்டுப்படத்தின்மூலம் காட்டப்பட்டுள் ளது. அதனை அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்குக.




1) கமலாவின் வீட்டுக்குத் தென்திசையில் அமைந்துள்ளது எது?
..........................................................
2) கடற்கரை கமலாவின் வீட்டிற்கு எத்திசையில் அமைந்துள்ளது?
..........................................................
3) பாடசாலையில் நின்று நோக்கும் ஒருவருக்கு வங்கி அமைந்துள்ள திசை யாது?
..........................................................
4) கமலாவின் வீட்டிற்கு நிருதிமூலையில் அமைந்துள்ளது எது?
..........................................................
5) கமலா, வீட்டிலிருந்து வடகிழக்குத் திசையில் சென்றால் எவ்விடத்தை அடைவாள்?
..........................................................

10. பின்வரும் உரைப்பகுதியை வாசிக்கவும்.
முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் நாடு செழிப்பாக இருந்தது. மக்கள் மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். ஆனால், மன்னன் மட்டும் சோகமே வடிவாக இருந்தான். ஏன்தெரியுமா?..
மன்னனின் சோகத்திற்கு காரணமாக இருக்கக்கூடுமென நீங்கள் கருதும் விடயங் கள் பற்றிய ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இருத்தல் வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய் - பயனி லைத்தொடர்பு திருத்தமானதாக இருத்தல்வேண்டும்.

1)
..........................................................................
2)
..........................................................................
3)
..........................................................................
4)
..........................................................................
5)
..........................................................................
6)
..........................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற் கன்னிகள் உண்மையில் உயிர்வாழ்கின்றார்களா?



கடற் கன்னிகள் (Mermaids) என்பவர்கள் உண்மையாக வாழும் உயிரினங்களாக எவரும் கண்களினால் கண்டதில்லை. ஆனால் பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் கிராமியக் கதைகளிலும் கவிதைகளிலும் கடற்கன்னிகள் பற்றி கூறப்படுகின்றது. இவைகள் அழகான தோற்றமுடையவையாகவும் அரைப்பங்கு மனிதராகவும் அரைப் பங்கு மீனாகவும் கடலில் வாழ்வதாகக் கூறப்படுகின்றன.

புராதன கிரேக்க புராணக் கதைகளில் கடற் கன்னிகள் கப்பல் மாலுமிகளை திசை திருப்பி ஓட்டச் செய்து ஆபத்துக்களில் மாட்டி விட்டதாகக் கூறப்படுகின்றது. ஜேர்மன் நாட்டார் கதைகளில் கடற்கன்னிகள் ஆறுகளுக்கடியில் பெரும் கோட்டை கொத்தளங்களில் வாழ்வதாகக் கூறப்படுகின்றது. செவ்விந்தியர்கள் மத்தியிலும் கடற் கன்னிகள் தொடர்பான பாரம்பரியக் கதைகள் உண்டு.

கடற்கன்னிகளின் உடலில் இடுப்பிலிருந்து மேல் பகுதி மனித வடிவத்திலும் இடுப்பிலிருந்து கீழ்ப்பகுதி மீன் அமைப்பைக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. கடற்கன்னிகள் மட்டுமின்றி கடல் மனிதர்களும் (ஆண்களும்) இருக்கிறார்கள் என்பதற்கான கதைகளும் இருக்கின்றன. பழங்காலக் கதைகளின்படி இந்த கடல் ஆடவர்கள் ஆறுகளில் அல்லது கடல்களில் குளிக்கச் செல்லும் இளம் பெண்களை கவர்ந்து சென்று தம்முடன் வைத்துக் கொள்வதாகக் கூறப்படுகின்றது.

ரம்யன்

கடற்கன்னிகள் அல்லது கடல் ஆடவர்கள் பற்றிய கதைகள் எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டனவென்பது தெரியவில்லை. ஆனால் ஆரம்ப காலத்தில் கடல்களிலும் ஆறுகளிலும் ஆய்வு செய்வதற்காக வெகுதூரம் சென்று திரும்பியவர்களால் இவ்வாறான கற்பனைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகின்றது. வள்ளங்கள், தோணிகள், படகுகள் போன்றவற்றை முதன்முதல் காணநேர்ந்த புராதனகால ஆதிவாசிகள் அந்த கடற்கலங்கள் கடலுக்கடியில் இருந்து வருவதாகவும் அதில் வந்தவர்கள் கடல் வாழ் மனிதர்கள் என்றும் கருதியிருக்க முடியும்.

கடல்வாழ் உயிரினங்களில் சில மனித சாயல் பெற்றிருப்பதைக் கண்டவர்களும் அவைகளைக் கடல் மனிதர்களாகக் கருதி கற்பனைக் கதைகளைக் கட்டியெழுப்பியிருக்க முடியும். நீர் நாய், கடற்குதிரை போன்ற நீர்வாழ் ஜந்துக்களை இவர்கள் மனித சாயல் கொண்ட கடற்பிராணிகளாகக் கருதியிருக்கலாம்.

கடற்கன்னிகள் மனிதர்கள் மீது காதல் கொண்டு அவர்களைக் கடலுக்குள் அழைத்துச் சென்று தங்களுடன் வைத்துக் கொண்டதாகக் கூறும் கதைகள்உண்டு. சிலசமயம் கடலுக்கு வெளியில் மனிதர்களுடன் வாழ்ந்து பின் ஏதோ வாக்குறுதி மீறப்பட்டதனால் மீண்டும் கடலுக்குத் திரும்பியதாகவும் கதைகள் உண்டு.

* * * * *

## புதன் பொய்கை

### சொல்லமுடியவில்லை

காலம் பல காத்திருந்து
C.D.M. A பெற்று
வீடு கொண்டு சென்று வெகு
விமரிசையாய்ப் பேசி
மூன்று நான்கு மாதங்கூட
முடியவில்லை அந்தோ
பேச்சு மூச்சின்றிப் போச்சுதையோ
ஆச்சியின்ரை உயிர் போய்
கொண்டு வந்த
அடுத்த வாரம்
சார்ச்சு (Charge)
இறங்கிப் போக
தூக்கிச் சென்று காட்ட ஐயா
பாட்சு (Parts) வந்த பின்னே
மாற்ற முடியுமென்றார் பாவம்
அவரும் என்ன செய்வார்
ஒன்று மட்டும் ஒழுங்காக
ஓடி ஓடி வருது
என்ன என்று கேட்காதீர்
எட்டா காசு என்ற "பில்லே"!

வருகுது பில் மட்டும்

அன்னை தாஸன்
(உரும்பிராய்)

# முதல் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது எப்போது

முற்காலத்தில் இலக்கியம் மற்றும் கலை கலாசாரங்களை வளர்ப்பதற்கான மாபெரும் கல்விச்சாலைகள் இந்தியாவில் இருந்துள்ளன. இவை பெரும்பாலும் தர்க்க சாத்திரங்களையும், சமய தத்துவங்களையும் கற்கும் - கற்பிக்கும் இடங்களாகவே இருந்துள்ளன. இவைகளில் பெரும் புலவர்களை நாடியும், அங்கு காணப்பட்ட அரும் நூல்களைக் கற்றும் அறிவை வளர்த்துக் கொள்வதற்காக கீழ்திசை நாடுகளில் இருந்தும், மேல்திசை நாடுகளில் இருந்தும் அறிவுப்பசி கொண்ட மேதைகள் வந்து கற்றுத் திரும்பினார்கள் என்று கூறப்படுகின்றது. ஆனால் இவை இன்றைய பல்கலைக்கழகங்கள் போல் பல்வேறு துறைகளில் கல்வியை வழங்குபவையாகவும் பயிற்சியை வழங்குபவையாகவும் இருக்கவில்லை. அதனால் அவைகளை பல்கலைக் கழகங்களாக எவரும் குறிப்பிடுவதில்லை. ஆரம்பத்தில் 'கல்லூரி' (College) என்பது ஒரு சங்கத்தை அல்லது ஏதாவது பொதுப்பணியில் ஈடுபட்டுள்ள ஆள்களின் கூட்டத்தைக் குறிப்பிடுவதாகவுமே இருந்துள்ளது. உதாரணமாக ரோமாபுரி யிலுள்ள கர்தினால்களின் கல்லூரி தான் (College of Cardinals) போப்பாண்டவரை தெரிவு செய்கின்றது. ஐக்கிய அமெரிக்காவில் குடியரசு ஜனாதிபதியையும் உப ஜனாதிபதியையும் தெரிவு செய்வதற்கான தேர்தல் கல்லூரி (electoral college) ஒன்று இருக்கிறது.

மத்திய காலத்தில் பொதுவான நலன்களுக்காக உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனம் அல்லது சங்கம் பல்கலைக் கழகம் (university) என்று அழைக்கப்பட்டது. எனவே ஆரம்பகால பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் அறிஞர்களின் அல்லது ஆசிரியர்களின் சங்கங்களாகவே இருந்துள்ளன. இந்த வகையான பிரமுகர்களின் நலன்களை பேணுவதற்காகவே அவை செயற்பட்டன. அவைகளுக்கென நிரந்தர கட்டடங்களும் இருந்ததில்லை.

படிப்பிப்பவர்களும் மாணவர்களும் ஒரு மண்டபத்தை அல்லது பெரிய அறைகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டார்கள். காலப்போக்கில் இந்த அமைப்புக்கள் வளர்ச்சி கண்டன. கட்டடங்கள் உருவாக்கப்பட்டன. சிலபல சட்ட உரிமைகளும் உருவாக்கப்பட்டு பல்கலைக்கழகங்கள் நிரந்தரமாக்கப்பட்டன.

அவ்வாறு தோன்றிய பல்கலைக்கழகங்களில் முதலில் தோன்றியவற்றில் ஒன்று தான் இத்தாலியில் சாலர்னோ (Salerno) என்ற இடத்தில் உள்ள பல்கலைக் கழகம். 9 ஆம் நூற்றாண்டளவில் மருத்துவக் கல்லூரியாக இது புகழ் பெற்று விளங்கியது. 1231 ஆம் ஆண்டில் அது பல்கலைக் கழகமாக முறைப்படி அங்கீகரிக்கப்பட்டது.

12 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இத்தாலியில் போலோக்மா (Bologma) என்ற இடத்தில் பல்துறை பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப்பட்டது. சட்டம், மருந்துகள், கலைகள் மற்றும் இறைஇயல் போன்றவை கற்பிக்கப்பட்டன.

பாரிஸ் நகரிலிருந்த பல்கலைக்கழகம் மத்திய காலத்தில் மிகவும் பிரசித்தமான பல்கலைக்கழகமாகத் திகழ்ந்துள்ளது.

12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இப்பல்கலைக்கழகம் அதிகார பூர்வமாக நிறுவப்பட்டது என்பதுடன் ஐரோப்பிய பல்கலைக்கழகங்கள் எல்லாவற்றுக்கும் மாதிரியாகவும் அமைந்தது.

இங்கிலாந்திலுள்ள மிகப்பழைமையான இரு பல்கலைக்கழகங்களும் மேற்படி பாரிஸ் பல்கலைக்கழகத்தின் மாதிரியிலேயே நிறு வப்பட்டன. ஒக்ஸ்போர்ட் (Oxford) மற்றும் கேம்பிரிட்ஜ் (Cambridge) ஆகிய இரண்டு பல்கலைக் கழகங்களும் சட்டப்படி 13 ஆம் நூற்றாண்டில் அங்கீகரிக்கப்பட்டன. ஒரு பல்கலைக்கழகமானது வழமையாக பல கல்லூரி களை உள்ளடக்கியதாகவே காணப்படும். பல்வேறு துறைகளில் பட்டங்கள் வழங்கப்படுவதை இது குறிக்கும்.

பல அமைப்புகள் கல்லூரிகளாக ஆரம்பிக்கப்பட்டு பல்கலைக்கழகங்களாக வளர்ச்சியடைகின்றன. அமெரிக்காவில் முதன்முதலில் தோன்றிய பல்கலைக்கழகம் ஹாவார்ட் (Havard) ஆகும். மாசுசெட்ஸில் கேம்பிரிட்ஜ் என்ற இடத்தில் 1636 இல் இது நிறுவப்பட்டது. இன்று அது மிகப் பெரிய பல்கலைக்கழகமாக விளங்குகின்றது.

ராமன்



## துபாயில் சுழலும் மாடி

சுழலும் மாடி ஒன்றை துபாயில் அமைப்பதற்கு கட்டடக் கலைஞர்கள் திட்டமிட்டுள் ளனர்.

இக்கட்டடமே உலகின் முதலாவது சுழலும் மாடியாக அமையும். நியூயோர்க் கட்டடக் கலைஞரான டேவிட்பிஷரால் இந்தக் கட்டடத்தை வடிவமைத் துள்ளார்.

420 மீற்றர் உயரமுடையதும் 80 மாடிகளைக் கொண்டதுமாக அமையவுள்ள இக்கட்டடத்தில் ஒவ்வொரு மாடிகளுக்கு மிடையில் சுழற்றக் கூடிய இயந்திரங்கள் பொருத்துவதால் மாடிகளை விரும்பிய திசைக்குத் திருப்ப முடியும்.

இந்த மாடியின் ஒவ்வொரு குடியிருப்பும் 4 மில்லியன் டொலர் முதல் 40 மில்லியன் டொலர் வரை விற்பனையாகவுள்ளது.

## 300 கி.கி. நிறையுடைய காட்டு மனிதன்

இந்தியாவின் வடக்கு மாநிலமான மேகாலயாவில் ஹரோஹில்ஸ் (Garo hills) பகுதியில் ஒதுக்குப் புறமாகவுள்ள காட்டுப் பிரதேசத்தின் சில இடங்களில் காட்டு மனிதனின் [அனுமனை ஒத்த உருவம்] உயிரி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காட்டு மனிதன் சுமார் 3 மீற்றர் உயரமும் 300 கிலோ கிராம் நிறையுடையவனுமாய் இருக்கலாம். இவனது உடல் முழுதும் கறுப்பு அல்லது சாம்பல் நிறமுடைய உரோமத்தால் மூடப்பட்டுள்ளது. தாவரபோசணியாக இவன் வாழ்கிறான்.

இந்தக் காட்டு மனிதன் சிறிய குழுவாக [இரண்டு பெரியவர்கள் [ஆண்+பெண்], இரண்டு குழந்தைகள் கொண்ட குழு] நடமாடுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த உயிரினம் குறித்து ஆராய்ச்சி செய்யும் ஆய்வாளர்கள் உரோமத்தின் மாதிரியை சேகரித்துள்ளனர். அத்துடன் அவற்றின் 46 சென்ரிமீற்றர்கள் நீளமுடைய பதிக்கப்பட்ட கால்தட அடையாளங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

எனினும் இதுவரை அந்த உயிரினத்தை புகைப்படம் எடுக்கவோ ஒளிப்படம் எடுக்கவோ முடியவில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.






## உங்கள் பிள்ளை கணித மேதையாக வேண்டுமா? சமையலறையில் வேலை பழக்குங்கள்

குழந்தைகளின் கணித அறிவு மேம்பட, அவர்களை சமை யலறையில் வேலை பழகச் சொன்னால் போதும் என்கிறார் ஓர் ஆய்வாளர். வீட்டு வேலைகளில் சிறு வயதில் குழந்தைகளை ஈடுபடுத்தினால் அவர்களின் கணித அறிவு வளர்வதாகவும் கூறியுள்ளார். கணிதப் பாடத்தை குழந்தைகள் ஏன் வெறுக்கின்றனர் என்பதைக் கண்டறிய, லீ செஸ்டர் பல் லைக்கழக வேந்தர் சேர் பீற்றர்ஸ் வில்லியம்ஸ் ஆராய்ச்சியில் இறங்கினார். ஆய்வு இறுதியில், ஆச்சரியப்படும் வகையில் ஒரு முடிவை அவர் வெளியிட்டுள்ளார்.

அதில் வீட்டிலுள்ள சிறிய சிறிய வேலைகளில் குழந்தைகளை ஈடுபடுத்தினால், அவர்கள் அதில் அதிக ஆர்வம் காட்டுவர். குழந்தைகளை சமையலறையில் உதவிக்காக வைத்துக்கொண்டால், சமையலுக்கு என்னென்ன பொருளை எந்தளவில் உபயோகிக்க வேண்டும் என்பது அவர்களுக்கு தெரியவருகிறது. இதன் மூலம் எடை அளவு, எண்ணிக்கை பற்றிய கணிதம் சுலபமாக வருகிறது. பொருள்களை வாங்கும் போது அவர்களையும் அழைத்துச் சென் றால், கூட்டல், கழித்தல் போன்ற கணிதங்களை சுலபமாகக் கற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வில்லியம்ஸ் மேலும் கூறுகையில், குழந்தைகள் ஏழு வயதிற்குள் கணிதத்தின் அடிப்படையைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் ஆரம்பக்கல்வியை முடித்து, வெளிவரும்போது கணிதத்தில் உள்ள பயம் நீங்கவேண்டும்.

அன்றாட வாழ்க்கையில் கணிதம் பற்றி விவாதிக்க, குழந்தைகளுக்கு [illegible]களுடன் பேசுவதால் மட்டும் அவர்கள் அறிவு விரிவடையாது. குழந்தைகள், தங்கள் வேலையை செய்வதற்கான முழு சுதந்திரம் கொடுக்க வேண்டும் - என்கிறார்.

## நீரில் கட்டிய கோயில்

கிணற்றுத் தவளைகள் ஒன்று கூடின!
'நாங்கள் வழிபட ஆலயம் அமைப்போம்'
தலைமைத் தவளை முன்னுரை செய்தது!
பேத்தைத் தவளை எழுந்து நின்றது
'கோயில் அமைக்க இடந்தான் எதுவோ'
கிணற்றில் வாழ்வதை நினைப்பில் கொண்டது!
'பூசலார் கட்டினார் மனதில் கோயில்
நாமும் கட்டுவோம் புதிதாய் நீரில்'
புதுமைத் தவளை செப்பி அமர்ந்தது!
குஞ்சுத் தவளைகள் குதூகலம் கொண்டன
கோயில் வேலைகள் செய்யும் நினைப்பில்!

'முடிகள் வைத்தால் முன்னேற்றம் இல்லையாம்
படிகள் ஏறும் பதவியும் இன்றே
முடியுள்ள தவளை முன்னர் செப்பிய
மொழிகள் உணர்ந்து செயற்பட வேண்டும்'
மூத்த தவளை இருந்தே சொன்னது
எழுந்து இருக்க இயலாக் குணத்தால்!

'கூடிக் கதைத்த விடயம் யாவும்
கூட்டத்தில் எடுத்த முடிவுகள் ஆகுமோ'
குதித்துப் பாயும் தவளை கேட்டது!
'எந்தக் கடவுளை எங்கு அமைப்பது
குந்த இடமிலா எங்கள் இடத்தில்'?
எல்லாத் தவளைகள் மனதிலும் உதித்தன
இந்தக் கேள்விகள்; இதற்கு விடையேதும்
எவரும் செப்பிலர் எமக்கும் புரிந்திலை
கூட்டம் நடத்திய தலைமைத் தவளை
வாயை திறந்திட அனுமதி இல்லை!

அனைவரும் அவரவர் திக்கினில் பேசினர்
பேசிய வார்த்தைகள் அறிக்கை இடுவது
தவளை ஒன்றின் தலைமைப் பணியாம்
அறிக்கை இடுவது எப்படி என்றே
சிந்தித்த தவளை குழம்பித் தவித்தது
தவளைகள் மனதில் உதித்த வார்த்தைகள்
சபையினில் குதித்து கும்மாளம் இட்டன!

கூடிய கூட்டம் முடிவினை எடுத்ததாம்
ஆடியில் விழாவை நடத்த முடியுமா?
யாவரும் ஒருங்கே பேசிய சத்தம்
கிணற்றினை அதிரச் செய்தது கண்டீர்!
அந்தோ அவ்வேளை அலறல் சத்தம்
என்ன என்றே அனைவரும் பார்த்தனர்
படையும் நடுங்கும் பாம்பின் வருகை
கண்டே தவளைகள் ஓட்டம் எடுத்தன
தப்பிப் பிழைத்தோம் என்றே ஓடின
தறிகெட்டு ஓடின தலைகெட் டோடினவே!

பூஞ்சிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான கட்சிகளின் அதிருப்தியாளர்களை சேர்ந்து பணியாற்ற அழைக்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 2

நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலைப் பெரும் சவாலாக ஏற்று அதில் வெற்றிபெற்று நாட்டில் பாரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இத்தேர்தலில் ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படுவதற்கு ஐக்கியதேசிய கட்சியிலும் அரச தரப்பிலும் உள்ள அதிருப்தியாளர்களுக்குப் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது ஜே.வி.பி.

எம்.பி பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு ஜே.வி.பியின் சார்பில் வட மத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடும் வசந்த சமரசிங்கவே மேற்படி அழைப்பை விடுத்துள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் காலை தமது இராஜினாமாக் கடிதத்தை நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் தம்மிக்க கித்துல்கொடவிடம் கையளித்துவிட்டு ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடிய போதே மேற்கண்ட அழைப்பை விடுத்தார்.

அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான நான் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு வட மத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுகின்றேன்.

இந்த மாகாணசபைத் தேர்தலில் இரண்டு மாகாணங்களுக்குமான முதலமைச்சர் பதவிகளை நாமே கைப்பற்றுவோம். அதற்கான முயற்சியில் நாம் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

மக்கள் மீது வாழ்க்கைச் சுமையை அரசு ஏற்றியுள்ள நிலையில் வெற்றி எமது பக்கமேதான் உள்ளது.

இது எமக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பம். இதை நாம் தவறவிடப் போவதில்லை. இதில் வெற்றிபெற்று நாட்டில் பாரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவோம். - என்றார். (அ-சி)

# ஆழ ஊடுருவும் அணி உறுப்பினரின் சடலம் அரசிடம் திங்கள் ஒப்படைப்பு

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக

கிளிநொச்சி, ஜூலை 2

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் உயிரிழந்த - அரசப் படைகளின் ஆழ ஊடுருவும் அணியைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் - சிப்பாயின் சடலம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது என கிளிநொச்சிச் செய்திகள் தெரிவித்தன.

இந்தச் சடலத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் அரசத் தரப்பிடம் கையளிப்பர் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

பூநகரி, அக்கராயன், ஜெயபுரம் வீதியில் கிளைமோர்க் குண்டு பொருத்திக் கொண்டிருந்த சமயம் அது வெடித்ததில் இவர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது. இடுப்புக்குக் கீழ் இவரது உடற்பகுதி சிதைவுற்றுக் காணப்பட்டது.

விடுதலைப் புலிகளின் சீருடையையே இந்தச் சிப்பாய் அணிந்திருந்திருக்கிறார்.

இவருடன் ஊடுருவிக் கிளைமோர்க் குண்டைப் பொருத்த வந்த ஏனையோர், குண்டு வெடித்து இச் 'சிப்பாய்' உயிரிழந்ததும், அவரது சடலத்தைக் குண்டு வெடித்த இடத்திலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் தம்முடன் தூக்கி வந்த பின்னர், அவசரத்தில் அதைக் கைவிட்டுத் தப்பிச் சென்றிருக்கின்றார்கள் என்றும் வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் சம்பந்தப்பட்ட பகுதியை கடக்கவிருந்த பொதுமக்களின் பஸ் ஒன்றை இலக்கு வைத்துக் கிளைமோரைப் பொருத்த முயன்ற சமயமே அது முற்கூட்டியே வெடித்தலில் இந்தச் சிப்பாய் பலியானார் என்று கருதப்படுகின்றது. (சி)

# புலிகளுக்கு 'ஹைடெக்' கழுத்துப்பட்டி: செயற்கைக்கோள் மூலம் கண்காணிப்பு

புதுடில்லி, ஜூலை 2

இந்தியாவில் புலிகளை, வேட்டைக் கும்பல்களிடம் இருந்து பாதுகாக்க செயற்கைக் கோள் மூலம் கண்காணிக்கப் புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டவை வருமாறு-

புலிகள் எண்ணிக்கை குறைவதைத் தடுக்கவும், வேட்டைக் கும்பல்களைக் கண்காணிக்கவும், சில நவீனமுறையை அமுல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக, ராஜஸ்தான் ரான்தம்பூரில் இருந்து சரிஸ்கா வனவிலங்கு பூங்காவுக்கு புலிகளை இடமாற்றிப் பாதுகாக்க முடிவு செய்துள்ளது. இம் மாத இறுதிக்குள் அவற்றை சரிஸ்காவுக்குக் கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது. புலிகளை இட மாற்றிப் பாதுகாக்க முடிவு அரசு செய்துள்ளது. இம் மாத இறுதிக்குள் அவற்றை சரிஸ்காவுக்குக் கொண்டுசெல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது. புலிகளைப் பாதுகாக்க, அவற்றின் கழுத்தில், ''ஹைடெக்'' பட்டையை அணிவிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நவீன பட்டை, 'எலக்ட்ரானிக்' மூலம் தயாரிக்கப்பட்டது. புலி நடமாட்டத்தை, செயற்கைக்கோள் மூலம் கண்காணிக்க இது உதவுகிறது.

அமெரிக்க நாஸா விண்வெளி ஆய்வு மையத்தின் ஏஜென்சி ஒன்றின் மூலம் அரசு இந்தத் திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. புலிகளுக்குப் பொருத்தப்படும் ''ஹைடெக்'' கழுத்துப்பட்டையின் விலை எட்டு லட்சம் ரூபா. 2004இல் ரான்தாம்பூரிலிருந்து இரண்டு பெண் புலிகளையும், ஒரு ஆண் புலிகயையும் சரிஸ்காவுக்குக் இடமாற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது, பிரான்ஸிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ''ரோடியோ காலர்'' கழுத்துப்பட்டை பொருத்தப்பட்டது. ஆனால். அந்தப் புலிகள் பற்றி இப்போது தகவல் இல்லை. சரிஸ்கா காட்டில் இருக்கின்றனவா, வேட்டையாடப்பட்டனவா என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது. (சி)


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்



சரவணை ஸ்ரீ செல்வகதிர்காம முருகன் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக 27.06.2008ஆம் திகதி ஒரு லட்சத்தி எழுபத்தையாயிரம் ரூபாவை (175,000/=) அன்பளிப்பாக வழங்கிய மாண்புமிகு அமைச்சர்

**திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு ஆலய பரிபாலன சபையினர் நன்றியைக் கூறுவதுடன், அவரது சேவை மேலும் தொடர வேண்டுமெனவும் மனதார வாழ்த்துகின்றோம்.

சரவணை ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன் ஆலயம், சரவணை மேற்கு, சரவணை.

**ஆலய பரிபாலன சபை.**

(75973)


# நீதிமன்ற முன்றிலில் ஊடகவியலாளர் அமைதியாக எதிர்ப்புப் போராட்டம்

கொழும்பு, ஜூலை 2

பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் கடந்த நூறு நாள்களுக்கு மேலாக விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளர் திஸநாயகத்தை விடுதலை செய்யக்கோரி நேற்று முன்தினம் ஊடக அமைப்பினர் கொழும்பு, பிரதம நீதிவான் நீதிமன்ற முன்றிலில் அமைதியான முறையில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

ஊடகவியலாளர் திஸநாயகம் நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பு, பிரதம நீதிவான் நீதிமன்றத் திற்கு விசாரணைக்காக அழைத்து வரப் பட்ட சமயமே ஊடகவியலாளர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமான இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் '100 நாள்களாக விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளர் திஸநாயகத்தை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்' என்று கோரும் பிரசுரங்களைத் தாங்கிய வண்ணம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மதியம் 12 மணிவரை இடம்பெற்ற இந்தப் போராட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர். (அ-சி)


## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 05.07.2008 சனிக்கிழமை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* ராஜீவ் - குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* P.ராணி - சாவகச்சேரி.
* திருமகள் - சிவலிங்கப்புளியடி.
* சிற்றி பாம் - கல்வியங்காடு.

(75971)



## பால் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை (ஒப்பந்த அடிப்படை)

தகைமைகள்: 1. பால் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்வதில் திறமை/அனுபவம் இருத்தல்வேண்டும்.

2. விண்ணப்பதாரி மூன்று சில்லு ஆட்டோ வாகனம் செலுத்தக்கூடிய சாரதி அனுமதிப் பத்திரம் உடையவராக இருத்தல்வேண்டும்.

கடமையின் தன்மை: எமது சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் யோக்கட், பஸ்ரஹஸ் பால், ஐஸ்கிறீம், சுவையூட்டிய பால், மில்க் ஜெலி, பனீர் போன்றவற்றைச் சந்தைப்படுத்தல் ஆகும்.

வயது: 18-50 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

பிணை: பதினைந்து ஆயிரம் மட்டும்

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களைச் சுயவிவரங்களுடன் தயாரித்து 10.07.2008ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்,**
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி/553557)



## கம்பனிக் கணக்குகளையும் உள்ளடக்கி

**Diploma in Computerized Accounting**

**ACCPAC + QuickBooks Premier + MYOB**

ஆகிய முன்னணி Accounting Softwareகளூடாக கற்பிக்கப்படும்

Course Contents:
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation
*(Including VAT)*
Stock Control
Bank Reconciliation

கணக்கியல் துறையில் கற்றுக்கொண்டிருப்போரும் கற்று முடித்தவர்களும் வெளிநாட்டில் கணக்கியல் துறையில் வேலை எதிர்பார்த்திருப்போர் கணக்கியல் துறையில் வேலைசெய்து கொண்டிருப்போரும் இக் கற்கைநெறியை பயிலலாம்.

ஆரம்பம்

| Week Day Batch: | WeekendBatch: |
|---|---|
| 03/07/2008 - 10 AM | 05/07/2008 - 3PM |
| 08/07/2008 - 10 AM | 06/07/2008 - 3PM |

**COMPUTER EXPRESS**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#167, KASTHURIYAR RD, JAFFNA. 0777-222422



## 45ஆம் நாள் நினைவு



அமரர்
**ஜெயக்குமார் ஜெய்தீஷ்**
(லக்ஷன்)

பிறப்பு 20.06.1989

இறப்பு 19.05.2008

*''நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும் உன் தேவனுடைய கரத்தில் ராஜ முடியுமாயிருப்பாய்'' (ஏசாயா 62-3)*

போய் வருகிறேன் என்று சொல்லிச் சென்ற செல்லமே
நீ வருவாய் என்று காத்திருக்க அதே நொடிப் பொழுதில்
விபத்தில் அகப்பட்டு விட்டாய் என்ற செய்தி வந்ததே செல்லமே
கதறியழுது கண்ணீரோடு ஓடி வந்து பார்த்தோம் செல்லமே
உன் உயிர் உன்னை விட்டுப் பிரிந்ததைப் பார்த்து
அனலிடை விழுந்த புழுப்போல் துடித்தோம் செல்லமே
ஆறுமோ எம் நெஞ்சம் அன்பின் அடைக்கலமாய்
கம்பீரமாய் நடப்பாயே சில்லெனச் சிரிப்பாயே
குறும்புக்கதை சொல்வாயே மறக்காது உதவுவாயே
மறைக்காது பேசுவாயே உறவு சொல்லி அரவணைப்பாயே
எம் செல்லமே லக்ஷன் எங்கு சென்றாயடா
பாடித்திரிந்த எம் வீட்டில் படமாகிப் போனாயோ
எம் அன்புச் செல்லமே நாள்கள் நாற்பத்தைந்து ஓடிப் போனதடா
ஆறுமோ எம் நெஞ்சம்

உன் ஆத்மா சாந்திபெற ஆண்டவரை பிரார்த்திக்கின்றோம்.

*447, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.*

உன் பிரிவால் துயருறும்:
**அன்பு அப்பா, அம்மா, சகோதரிகள்.**

(75970)



## புலமைப்பரிசில் திட்டம் 2008

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science, 5 Months, ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing, 4 Months, ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Designing, 4 Months, ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing, 4 Months, ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering, 3 Months, ~~10,000~~ 2,000 |
| Diploma in AutoCAD, 3 Months, ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office, 3 Months, 1,500 | Accounting Package, 3 Months, ~~10,750~~ 2,150 |

80% OFF

மாணவர் நலன்கருதி Lab இணையும் இணைத்துள்ளது

வரையறையற்ற செய்முறைப்பயிற்சி

Multimedia Projector மூலமான விரிவுரைகள்

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in multimedia | ~~5,500~~ | 2,750 |
| Diploma in Video Editing | ~~6,500~~ | 3,250 |

ஆரம்பம்:
Batch I 04/07/2008 - 9AM
Batch II 05/07/2008 - 9AM
Batch III 06/07/2008 - 9AM
Batch IV 09/07/2008 - 9AM

**COMPUTER EXPRESS**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#167, KASTHURIYAR RD, JAFFNA. 021 222 8250


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஊடக அடக்குமுறை அராஜகம் ஜனநாயகத்துக்குச் சாவுமணி

ஜனநாயகத்தின் பெயரால் அராஜகம் அளவு மீறி அரங்கேறும் தேசமாக மாறி வருகின்றது இலங்கைத் தீவு.

ஜனநாயகத்தின் நான்காவது காவலர்கள் என்று கூறப்படும் ஊடகவியலாளர்களை, வன்முறை அராஜகங்கள் மூலம் குரூரமாக அடக்கி, அவர்களின் குரல் வளையை ஒடுக்கும் திட்டமிட்ட 'அரச பயங்கரவாதம்' இந்தத் தேசத்தின் அன்றாட வழக்கமாகி விட்டது.

இம்முறை இலங்கைப் பத்திரிகை நிறுவனத்தின் மூத்த அதிகாரிகளில் ஒருவரும், இராணுவ விடயங்கள் பற்றிய உள்வீட்டுத் தகவல்களை நடுநிலையில் நின்று கட்டுரைகளாக வரைபவரும், பல தரப்பினராலும் அதிகம் மதிக்கப்படுகின்றவருமான நாமல் பெரேரா இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றார். அவருடன் கூட அச்சமயம் பயணம் செய்த - பிரிட்டிஷ் தூதரகத்தில் அரசியல் அலுவலராகப் பணிபுரிகின்ற - மகேந்திர ரட்ணவீரவும் கடும் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றார். இவரும் பத்திரிகை வட்டாரங்களில் ஒரு நடுநிலை ஊடகவியலாளராக மதிக்கப்படுகின்றவர்.

ஜனசந்தடி மிக்க கொழும்பு நகரின் மத்தியில் - அலுவலக நேரம் முடிந்து, வீதிகளில் ஆள்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருக்கையில் - வெள்ளை வானிலும், மோட்டார் சைக்கிள்களிலும் கூட்டமாக வந்து ஓர் ஊடகவியலாளரைப் பலரும் பார்த்திருக்கக் கடத்த முயலும் அட்டகாசம் இடம்பெற்றிருக்கின்றது. சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர் பயணம் செய்த காரின் கதவுகள் இறுக்கி மூடப்பட்டிருந்தமையால் அவற்றைத் திறக்க முடியாத குண்டர்கள் காரின் கண்ணாடிகளை உடைத்து அதன் வழியாக அவரை இழுத்தெடுக்கப் பார்த்திருக்கின்றார்கள். சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர் மசியாததால் அவரைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டுத் தாம் வந்த வாகனங்களிலேயே தப்பிச் சென்றிருக்கிறார்கள். இவ்வளவு கொடூரங்களையும் புரிந்தவர்கள் எங்கும் வழி மறிக்கப்படாமல் சாவகாசமாகத் திரும்பி விட்டனர்.

தெற்கில் - குறிப்பாகக் கொழும்பில் - ஊடகங்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் பெரும் அடக்கு முறையின் மற்றொரு அங்கமே இது.

வழமைபோல, குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் போகும், தொடர் வன்முறைக் கொடூரத்தின் ஓர் அத்தியாயமாக இந்தத் தாக்குதலும் பதிவு செய்யப்படுவதுடன் விடயம் அடங்கிப் போகும். அவ்வளவுதான்.

அதேசமயம், ஊடகவியலாளர்களின் குரலை அடக்கும் மற்றொரு கொடூரம் இன்னொரு புறத்தில் தொடரும்.

'பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்று பாஞ்சாலி சபதத்தில் பாரதி கூறியமை போல -

ஆட்சி பீடத்தின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தும் ஊடகவியலாளர்களுக்கு இதுதான் கதி என்ற சாத்திரம் இந்தத் தேசத்தில்.

இப்படி ஆட்சி அதிகாரத்தின் அராஜகங்களை - அட்டூழியங்களை - அவலங்களை - ஊழல், தவறுகளை - பரகசியப்படுத்தும் ஊடகவியலாளரை சட்ட ரீதியாக எதிர்கொள்ள முடியாத - அதற்குத் திராணியற்ற - அதற்கான அடிப்படை நியாயம் ஏதும் கொண்டிராத - ஆட்சித் தரப்பு, அவர்களை வன்முறை அராஜகம் மூலம் அழித்தொழித்து, அடக்கும் அட்டகாசத்திலும், அட்டூழியத்திலும் இறங்கியிருக்கின்றது.

தென்னிலங்கையில் அடுத்தடுத்து ஊடகங்களுக்கு எதிராகக் கட்டவிழும் வன்முறைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பவர்களுக்கு இந்தக் கொடூரத்தின் பின்னால் இருப்பவர்களை - பேனாக்களை ஆயுதமுனையில், அதுவும், தங்களை உருக்காட்டாமல் ஒளிந்தபடி அடக்கமுனையும் - 'வீரமற்ற கோழைகள்' யார் என்பதை - ஊகித்தறிவது அப்படி ஒன்றும் கஷ்டமல்ல.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானது.

ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடூரங்களை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சர்கள் மட்ட உபகுழு என்ற ஒன்றை ஆரவாரமாக நியமித்து சர்வதேசத்தின் காதில் பூச்சுற்ற அரசு அண்மையில் நடவடிக்கை எடுத்திருந்தது.

அந்த அமைச்சர்கள் மட்ட உபகுழு 24 மணி நேரமும் தனது அலுவலகத்தைத் திறந்து வைத்துக்கொண்டு பணியாற்றுவதாகக் கூறுகின்றது. அந்த உபகுழு இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் காத்திரமான என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பதை சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டுகின்றமை போல அனைத்துத் தரப்பினரும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு பார்த்திருக்கின்றார்கள்.

இப்படித்தான் நாட்டில் ஆள்கள் வல்வந்தமாகக் கடத்தப்படுதல், காணாமற் போகச் செய்யப்படுதல், கப்பம் அறவிடல் போன்ற அட்டூழியங்களை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சர்கள் மட்ட உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதுவும் பத்தோடு பதினொன்றாக உயிர்வாழும் அமைப்பாகத் தன்னைக் காட்டிக்கொண்டதைத் தவிர இவ்விடயத்தில் வேறு பயனுள்ள எந்த நடவடிக்கையையும் எடுத்ததாக இல்லை. அதுவும் கூட, சர்வதேசத்தின் கண்ணில் மண்ணைத் தூவும் வகையில் - அத்தகைய ஆள்கடத்தல் கொடூரங்கள் குறித்து கடும் நடவடிக்கை எடுக்க அரசுப்பீடம் முனைப்பாக உள்ளது என்று சர்வதேச சமூகத்தின் காதில் பூச்சுற்றுவதற்கு மட்டும் உதவும் வகையில் - அமைந்ததோடு போய்விட்டது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான இத்தகைய அடக்குமுறைக்கு - ஜனநாயக விரோத செயற்பாட்டுக்கு - அரச பயங்கரவாதத்துக்கு - ஆப்பு வைப்பது எப்படி என்று தெரியாமல் நாகரிக சமுதாயம் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

# இராணுவ, பொலிஸ் பாதுகாப்பு மத்தியில் பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை

## மறியல் போராட்டம் செய்தோர் அகற்றப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்துக்கு நேற்றுக் காலை பூரண இராணுவ, பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. இதனையடுத்து பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் அங்கு ஆரம்பமாகின.

பரீட்சைகள் எதுவுமின்றித் தமக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமெனக் கோரி வேலையற்ற பட்டதாரிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் யாழ்.வலயக் கல்வி அலுவலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கா விட்டால் தமது போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் அறிவித்திருந்தனர்.

இந்த மறியற் போராட்டம் காரணமாக நேற்று முன்தினம் ஆரம்பமாகவிருந்த பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை தடைப்பட்டது.

இந் நிலையில் நேற்றுக் காலையும் யாழ்.வலயக் கல்வி அலுவலகம் முன்பாக ஒன்று கூடிய வேலையற்ற பட்டதாரிகள் அங்கு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து அங்கு வந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அகற்றி கல்வி வலயத்தின் பிரதான வாயிலைத் திறந்து விட்டனர்.

இதனையடுத்துப் பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் ஆரம்பமாகின. சுமுகமான முறையில் நேர்முகப் பரீட்சை இடம்பெற்றது.

வாசலில் இருந்து அகற்றப்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் வாசலுக்கு அருகில் வீதியோரங்களில் கூடிநின்றவாறு தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

கல்வி வலய வளாகத்திலும் அதன் சுற்றாடலிலும் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை -

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமென யாழ்.வலயக் கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (50-86-302)

# 'மொபிரெல்' தொலைபேசிச் சேவை குடாநாடு முழுவதும் விஸ்தரிக்கப்படுகிறது

## 19 கோபுரங்கள் அமைக்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ்.குடாநாட்டின் சகல பிரதேசங்களுக்கும் 'மொபிரெல்' கையடக்கத் தொலைபேசிச் சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது. இதற்கென 19 தொலைத்தொடர்புக் கோபுரங்கள் இங்கு அமைக்கப்படவுள்ளன.

இது பற்றி நேரடியாக மதிப்பீடு செய்து பணிகளை ஆரம்பிப்பதற்கென உயர்மட்டத் தொழில் நுட்பக் குழுவொன்று கடந்தவாரம் யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்தது.

இந்தக் குழுவின் மதிப்பீட்டின் அடிப்படையில் முதற்கட்டமாக 9 தொலைத் தொடர்புக் கோபுரங்கள் உடனடியாக அமைக்கப்படவுள்ளன. யாழ்.நகரை அண்டிய பகுதிகளிலும் கோப்பாய்ப் பிரதேசத்திலும் இந்தக் கோபுரங்கள் அமையவுள்ளன. இதற்கான உபகரணங்களில் ஒரு தொகுதி யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாக 'ரெலிக்கொம்' நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.வந்த இந்தத் தொழில்நுட்பக் குழுவினர் ஒருவாரம் இங்கு தங்கி நின்று தொலைத் தொடர்புக் கோபுரங்கள் அமையவுள்ள இடங்களை நேரடியாகப் பார்வையிட்டனர். இதன் முதற்கட்டமாக 9 இடங்களில் கோபுரங்களை அமைத்து 'மொபிரெல்' கைத் தொலைபேசிச் சேவையை விஸ்தரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டப் பணிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்யப்படும் எனவும் அடுத்த கட்டப் பணிகள் இவ்வாண்டு டிசம்பர் மாதத்துக்குள் நிறைவடையும் எனவும் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 'மொபிரெல்' சேவை குடாநாடு முழுவதும் கிடைக்கும் எனவும் அந்த ரெலிக்கொம் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

ரெலிக்கொம்மின் சித்தன்கேணி, சுன்னாகம், நெல்லியடி பரிவர்த்தனை நிலையங்களிலும் வேறு காணிகளிலும் இந்தத் தொலைத் தொடர்புக் கோபுரங்கள் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (50)

# போசாக்கு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையே போட்டிகள்

வலி.வடக்கு,ஜூலை2

போசாக்கு மாதத்தினை முன்னிட்டுப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் தெல்லிப்பழை, உடுவில் கல்விக் கோட்டமும் இணைந்து போட்டிகளை நடத்தவுள்ளன.

போசாக்குப் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் முகமாக இப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போட்டிகள் 4ஆம், 5 ஆம் தர மாணவர்களுக்குக் கீழ்ப் பிரிவாகவும் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் தர மாணவர்களுக்கு மத்திய பிரிவாகவும் 9 ஆம், 10 ஆம், 11 ஆம் தர மாணவர் களுக்கு மேற்பிரிவாகவும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு அதிமேற் பிரிவாகவும் நடத்தப்படவுள்ளன.

கீழ்ப்பிரிவு மாணவர்கள் போசாக்கு உணவு சம்பந்தமாக ஓவியம் வரைதலும் மத்திய பிரிவு மாணவர்களுக்கு போசாக்கு சுகநலம் பற்றிய வினா விடைப் போட்டியும், மேற்பிரிவு மாணவர்களுக்குக் கவிதை எழுதும் போட்டியும் அதி மேற்பிரிவு மாணவர்களுக்குப் போசாக்கும் வீட்டுத் தோட்டமும் 'கட்டிளமைப் பருவமும், போசாக்கும் தாய்மையும்' என்னும் தலைப்புகளில் பேச்சுப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

இது சம்பந்தமான விவரங்கள் தெல்லிப்பழை, உடுவில் கல்விக்கோட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் மேலதிக விவரங்களைப் பகுதி சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (203-86)

## தரம் 5 மாணவர்களுக்கு மதிப்பீட்டுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை2

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் ஐந்து வகுப்பு மாணவர்களுக்கு யேசுசபை அகதிகள் பணி நிறுவன அனுசரணையுடனான மேம்பாட்டுச் செயற்றிட்ட மதிப்பீடு - 9 பரீட்சை நாளை நடத்தப்படவுள்ளது.

இப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை இன்று வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பரீட்சை நடத்திப் பகுப்பாய்வினை வலயக் கல்வி அலுவலகக் கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில்

# புதிய கட்டடங்களை அமைப்போர் சபையில் அனுமதியை முதலில் பெறவேண்டும்

நவாலி,ஜூலை2

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் புதிய கட்டடங்களை அமைப்போர் பிரதேச சபையின் அனுமதியை முதலில் பெறவேண்டும் என்று பிரதேசசபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் முன் அனுமதி பெறாமல் பலர் புதிய கட்டடங்களை அமைத்து வருகின்றனர்.

இது சட்டத்தை மீறும் ஒரு செயலாகும்.

புதிய கட்டடங்களை அமைப்போர் பிரதேச சபையிடம் அனுமதி பெற்ற பின்னரே அமைக்க வேண்டும்.

இதற்கான அனுமதி பெறுவதற்கு உரிய படிவங்களைக் கிராம உப அலுவலகங்களில் பெற்றுப் பூர்த்தி செய்து அதற்கான வரைபடத்துடன் பிரதேச சபையில் சமர்ப்பித்து அனுமதி பெற வேண்டும்.

அனுமதி கிடைத்த பின்னரே கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட வேண்டும். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (203-100)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 19 | 03.07.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | அமாவாசை |
| | மு.ப. 09.08 வரை |
| நட்சத்திரம் : | திருவாதிரை |
| | பி.ப. 01.31 வரை |
| சுபநேரம் : | 07.27 - 08.57 |
| ராகுகாலம் : | 01.27 - 02.57 |

## ஒரு சில பாடப் புத்தகங்கள் வந்துசேரவில்லை

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கென அண்மையில் கப்பலில் கொண்டு வரப்பட்ட பாடநூல்களில் ஒரு சில வகுப்புக்குரிய பாடப் புத்தகங்கள் வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தரம் 7 தவிர்ந்த ஏனைய வகுப்புகளுக்குக் கத்தோலிக்கம், கிறிஸ்தவம் ஆகிய பாட நூல்களும், தரம் 7 வகுப்புக்குரிய குடியியல், செய்முறைத் தொழில்நுட்பம் ஆகிய பாடநூல்களும் வரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தரம் 11 வகுப்புக்கான சிங்கள மொழியிலான கணித பாடநூல்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் 47ஆவது ஆண்டு நிறைவையொட்டி இணுவில் மக்கள் வங்கிக் கிளையில் நடைபெற்ற நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
உதவிப் பிரதேச முகாமையாளர் எஸ்.ஹென்றி மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் இணுவில் மத்திய கல்லூரி அதிபர் ச.சதானந்தன் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.
கன்னாதிட்டி மக்கள் வங்கி முகாமையாளர் ச.சிவபாலன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் -
யாழ்.பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர் ஒருவருக்கு வங்கி முகாமையாளர் செ.கந்தசாமி சேமிப்புக் கணக்குப் புத்தகம் கையளிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# மக்கள் வங்கியின் சகல கிளைகளிலும் 47ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

## நேற்று ஆரம்பமாகின

நல்லூர்,ஜூலை2

யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் வங்கியின் 47ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின. தொடர்ந்து ஒரு மாதகாலத்துக்கு இடம்பெறவுள்ளது.

வங்கிக் கிளைகளில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டு வங்கிகள் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. வாடிக்கையாளர்களுக்குச் சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன.

ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் முகாமையாளர் எஸ்.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில் மக்கள் வங்கியின் உதவி பிராந்திய முகாமையாளர் த.க.ஆனந்தராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

வாடிக்கையாளர்களுக்கான சேமிப்புச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டமும் உதவி பிராந்திய முகாமையாளரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச முகாமையாளர் திருமதி ச.சிவனருட்சுந்தரம் உட்பட வங்கி உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

இணுவில் மக்கள் வங்கிக் கிளையில் மக்கள் வங்கியின் உதவிப் பிரதேச முகாமையாளர் எஸ்.ஹென்றி மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

இணுவில் மக்கள் வங்கியின் முகாமையாளர் செல்லையா கந்தசாமி தலைமையில் நடைபெற்ற விழாவில் இணுவில் மத்திய கல்லூரி அதிபர் ச.சதானந்தன் பிரதம விருந்தினராகவும் கன்னாதிட்டி மக்கள் வங்கி முகாமையாளர் ச.சிவபாலன் உட்பட வாடிக்கையாளர்கள் கலந்துகொண்டனர்.

47ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இணுவில் கிளை தனது சொந்த நிதியில் இருந்து ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்குச் சேமிப்புக் கணக்கை ஆரம்பித்துள்ளது.

நேற்றைய தினம் 80 சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இணுவில் பகுதியைச் சேர்ந்த பெற்றோர்கள் தமது ஐந்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளின் பெயர் விவரங்களை மக்கள் வங்கியில் பதிவுசெய்யும் பட்சத்தில் அவர்களின் பெயரில் மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் குறிப்பிட்ட கணக்கில் தமது பிள்ளைகளுக்கான சேமிப்புகளைத் தொடரலாம் எனவும் இணுவில் மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் செ.கந்தசாமி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி பிரதேச உதவி முகாமையாளர் குகதாசன் கலந்துகொண்டு, பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான யாழ்.மத்திய கல்லூரி மாணவருக்கான உதவித்தொகைக்கான வங்கிக் கணக்குச் சேமிப்புப் புத்தகங்களை வழங்கினார். (203-111)

# இளையோர் செயலமர்வு இந்து மகளிரில்

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் இன்றும் நாளையும் நடத்தப்படவுள்ள இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வுகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலேயே இடம்பெறும் என்று யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி தொழில் வழிகாட்டல் செயலமர்வு யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும் என்று முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-02)

# ஈழத்தமிழரின் போராட்டத்தை ஒடுக்கவே இந்தியப் படை இலங்கைக்குச் செல்கின்றது

## பழ.நெடுமாறன் குற்றச்சாட்டு

சென்னை,ஜூலை2



கொழும்பில் நடைபெறும் சார்க் மாநாட்டின் பாதுகாப்புக்கு 3 ஆயிரம் இந்தியப் படைவீரர்கள் சென்றுள்ளனர் எனவும் இவர்களை வைத்து ஈழத்தமிழர்களின் போராட்டத்தை ஒடுக்க இலங்கை அரசு திட்டம் தீட்டியிருக்கிறது எனவும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தச் சதித்திட்டத்திற்கெதிரான வாழத் துடிக்கின்ற ஈழத்தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்து தங்கள் எதிர்ப்பையும் - உள்ளக் குமுறல்களையும் வெளிப்படுத்தவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு:-

சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள கொழும்பு செல்லும் இந்தியப் பிரதமருக்குப் பாதுகாப்பு அளிப்பது என்ற போர்வையில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான இந்தியப் படைவீரர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுகின்றனர் எனவும், முதல் கட்டமாக 1,500 வீரர்கள் கொழும்பு சென்றுவிட்டனர் எனவும் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

வங்காளதேசம், நேபாளம், சிக்கிம், பாகிஸ்தான், மாலைதீவு போன்ற நாடுகளில் சார்க் மாநாடுகள் நடைபெற்றபொழுது அவற்றில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமருக்கு இவ்வளவு பெருந்தொகையான அளவுக்குப் பாதுகாப்புப் படைவீரர்கள் அனுப்பப்பட்டதில்லை. சார்க் மாநாடோ, வேறு சர்வதேச மாநாடுகளோ எதுவானாலும் கலந்துகொள்ள வரும் அரச தலைவர்களுக்கு மாநாடு நடைபெறும் நாட்டின் அரசுதான் பாதுகாப்பு அளிப்பது மரபு மட்டுமல்ல கட்டாயக் கடமையும் கூட.

தனது நாட்டுக்கு வரும் தலைவருக்கு அந்நிய நாட்டுப் படைவீரர்கள் பாதுகாப்பு அளிப்பதை எந்த நாடும் அனுமதிக்காது, வருகை தரும் அரசுத் தலைவர்கள் தங்களின் சொந்த மெய்க்காவல் படையினரை அழைத்துவர மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். இது உலக வழக்கமாகும்.

ஆனால், பிரதமருக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் பெருந்தொகையாக அனுப்பப்படும் சிறப்புப் பயிற்சி பெற்ற இந்திய வீரர்களை மாநாட்டுக்குப் பிறகு அங்கேயே வைத்துக்கொண்டு ஈழத்தமிழர்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்கு அவர்களைப் பயன்படுத்த சிங்கள அரசு தீட்டிய திட்டத்திற்கு இந்திய அரசும் இணக்கம் தெரிவித்திருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது. இந்தச் சதித்திட்டத்திற்கு எதிராக ஈழத்தமிழர்கள் கிளர்ந்தெழவேண்டும் என வேண்டிக்கொள்கிறேன் - என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# அணு ஒப்பந்தத்தை நிறைவேற்ற இடதுசாரிகளுடன் தொடர்ந்து பேச்சு

## காங்கிரஸ் அறிவிப்பு

புதுடில்லி,ஜூலை2

அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்ற இடதுசாரிக் கட்சிகளுடன் தொடர்ந்து பேச்சு நடத்துவோம் - என்று காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இதுபற்றி அகில இந்தியக் காங்கிரஸ் பொதுச் செயலாளர் அகமது பட்டேலிடம் செய்தியாளர்கள் கருத்துக் கேட்டபோது அவர் கூறியவை வருமாறு:-

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காணப்படும். இடதுசாரிகளுடன் பேச்சு நடத்துவதற்காக கதவுகள் இன்னும் திறந்தே இருக்கின்றன. எனவே, இடதுசாரிக் கட்சிகளுடனும், கூட்டணிக் கட்சிகளுடனும் நாங்கள் தொடர்ந்து பேச்சு நடத்துவோம். அணுசக்தி ஒப்பந்தம் இந்தியாவின் நலனைக் கருத்தில்கொண்டு ஏற்படுத்தப்பட்டது. நமது எரிசக் தித் தேவைப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்த ஒப்பந்தம் உதவியாக இருக்கும் - என்றார் அகமது பட்டேல்.

காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் கூறும்போது -

அணுசக்தி ஒப்பந்தத்தையும், கூட்டணியையும் காப்பாற்ற நாங்கள் தொடர்ந்து முயற்சி மேற்கொள்வோம் - என்றார். இடதுசாரிகள் கூறுவதுபோல் [illegible] கூற முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் மற்றொரு செய்தித் தொடர்பாளரான சகீல் அகமது கூறியவை வருமாறு:-

அணுசக்தி ஒப்பந்தத்தை மத்திய அரசு நிறைவேற்ற முயன்றால் அது மதவாத சக்திகளுக்கு உதவி செய்வதாக அமைந்துவிடும் என்று இடதுசாரிக் கட்சிகள் கூறுவது ஒன்றும் புதிதல்ல. அவர்கள் ஆரம்பத்திலிருந்தே இப்படித்தான் கூறி வருகிறார்கள். மதவாத சக்திகளை எதிர்த்துக் காங்கிரஸ் எப்போதும் போராடி வருகிறது.

நாட்டின் எரிசக்தி பாதுகாப்புப் பிரச்சினையில் இருந்து அணுசக்தி ஒப்பந்தத்தைப் பிரித்துப் பார்க்கமுடியாது. எரிசக்தித் தேவையைப் பூர்த்திசெய்ய அணுசக்தி மிகவும் அவசியமானது - என்றார்.


02 07 2008

ஆயுஸ்ய ஹோம அழைப்பும் முதலாவது பிறந்தநாள் வாழ்த்தும்




பருத்தித்துறையில் வசிக்கும் பாலசதீஸ் சர்மா- ஜனனி தம்பதியரின் செல்வப் புதல்வன் கபிலசர்மா (கபில்) தனது முதலாவது பிறந்தநாளை இன்று (02.07.2008) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். கபில் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அக்காமார் லக்ஷினி, லக்ஷனா, மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கும்பி அம்மன் அருளுடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

பா.பாலசதீஸ் சர்மா [illegible]
தேவி அம்மன் கோவில், [illegible] வீதி, பருத்தித்துறை.

(வி/553560)



ஸ்கந்தாவின் இதய அஞ்சலி

எமது கல்லூரியின் பகுதித் தலைவர் சி.சிவஞானராஜா அவர்களின் அன்புச் சகோதரி
திருமதி சீதாலட்சுமி பாலயோகன்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.
(75979)



ஸ்கந்தாவின் இதய அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் பௌதிக ஆசான்
தர்மலிங்கம் சண்முகலிங்கம் B.Sc.
அவர்களின் பிரிவு குறித்து எமது அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.
(75998)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியக் கிண்ணத் தொடர்



ஜெயசூரியா

# பிறந்தநாளில் சனத் அனல் பறந்த ஆட்டம் இறுதியாட்டத்தில் நுழைந்தது இலங்கை!

கராச்சி, ஜூலை 02

தனது 39ஆவது பிறந்த நாளில் சனத் ஜெய சூரியா அனல் பறந்த ஆட்டம் ஆட, சங்ககரா மீண்டும் ஒருமுறை சதம் விளாச, இலங்கை அணி பங்களாதேஷை 158 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. இதன் மூலம் ஆசியக் கிண்ண இறுதியாட்டத்துக்கு இலங்கை அணி தகுதி பெற்றது.

ஆசியக் கிண்ணத் தொடர் பாகிஸ்தானில் நடைபெற்றுவருகிறது. நேற்றுமுன்தினம் நடந்த 'சுப்பர்-4' சுற்றுப் போட்டியில் இலங்கை, பங்களாதேஷ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

ஆரம்ப ஜோடியாகக் களமிறங்கிய ஜெயசூரியா, சங்ககார ஆகியோர் சிறந்த ஆரம்பத்தை அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர். ஜெயசூரியாவின் ஆட்டத்தில் அனல் பறந்தது. பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சை வெளுத்து வாங்கிய ஜெயசூரியா 55ஆவது பந்தில் சதம் கடந்தார். முதல் விக்கெட்டுக்காக 201 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் ஜெயசூரியா 130 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 88 பந்துகளை எதிர்கொண்ட அவர் 6 சிக்ஸர்கள் மற்றும் 16 பவுண்டரிகளையும் தனது ஓட்ட எண்ணிக்கையில் சேர்த்திருந்தார்.

மறுமுனையில் சிறப்பாக விளையாடிய சங்ககரா ஒருநாள் போட்டிகளில் 10ஆவது சதம் கடந்தார். இது இத்தொடரில் அவர் அடிக்கும் மூன்றாவது சதமாகும். இவர் 121 ஓட்டங்களை (ஒரு சிக்ஸர், 16 பவுண்டரிகள்) எடுத்து, அப்துர் ரசாக்கின் பந்தில் 'போல்ட்' ஆனார். மற்றைய வீரர்கள் எவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடவில்லை. அதிரடியாக ஆட நினைத்து விரைவாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்தனர். இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 332 ஓட்டங்களை எடுத்தது.

கடின இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பத்திலேயே வாஸ் அதிர்ச்சி கொடுத்தார். இவரது வேகத்தில் தொடக்க வீரரான ரமீம் இக்பால் 8 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். பின்னர் வந்த அஸ்ரபுல் 14 ஓட்டங்களுடன் மிராண்டோவின் பந்து வீச்சில் பவிலியன் திரும்பினார். ஓரளவு சிறப்பாக ஆடிய ஆரம்ப வீரரான நஸிமுடீன் 47 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 'ரன் அவுட்' ஆனார்.

மற்றைய வீரர்கள் முரளிதரனின் சுழலில் சிக்கி விரைவாக ஆட்டமிழந்தனர். போராடிய ரகீபுல் ஹசன் 63 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 52 ஓட்டங்களை விளாசி முரளிதரனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்த வந்த வீரர்கள் எவரும் ஒற்றை இலக்க ஓட்ட எண்ணிக்கையைத் தாண்டவில்லை.

இறுதியில் பங்களாதேஷ் அணி 38. 3 ஓவர்களில் 174 ஓட்டங்களுக்குள் சுருண்டு 158 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. சிறப்பாகப் பந்துவீசிய முரளிதரன் 31 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆட்டநாயகனாக சனத் ஜெயசூரியா தெரிவானார்.

### பிறந்த நாள் பரிசு

★ நேற்றுமுன்தினம் 39ஆவது பிறந்த நாளை கொண்டாடிய இலங்கைவீரர் ஜெயசூரியா 55ஆவது பந்தில் 100 ஓட்டங்களைத் தொட்டு, ஒருநாள் அரங்கில் 6ஆவது அதிகவேக சதத்தைப் பதிவு செய்தார்.

★ ஒருநாள் அரங்கில் 26ஆவது சதத்தைப் பதிவுசெய்த ஜெயசூரியா, அதிக சதம் கடந்த வீரர்கள் வரிசையில் ஆஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங்குடன் (26 சதங்கள்) இரண்டாவது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளார். முதலிடத்தில் இந்தியாவின் சச்சின் (42 சதங்கள்) இருக்கிறார்.

★ ஒருநாள் அரங்கில் 100 ஓட்டங்களை எட்டிய இரண்டாவது மூத்த வீரர் (39 வயது) என்ற சாதனையும் ஜெயசூரியா பதிவுசெய்துள்ளார். முதலிடத்தில் இங்கிலாந்தின் போய் கொட் (39 ஆண்டு 51 நாள்கள்) இருக்கிறார்.

# சிம்பாப்வே மீது பொருளாதாரத் தடை விதிப்பதற்கு ஐ.நா. சபை தயாராகிறது

நியூயோர்க், ஜூலை 02

சிம்பாப்வே மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க ஐ. நா. முன்வந்துள்ளது. இதற்கான நகல் வரைவு திட்டத்தை அமெரிக்கா தயாரித்துள்ளது. இதன் படி சிம்பாவேக்கான ஆயுத விற்பனை தடை செய்யப்படும். குறிப்பிட்ட தனி நபர்களினதும் நிறுவனங்களினதும் சொத்துக்கள் முடக்கப்படும் என ஐ. நா. வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

எனினும், சிம்பாப்வே மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது ஒரு கடினமான காரியம். இத்தடைகள் விதிப்புக்கு தென்னாபிரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளையும் இதர ஐ. நா. பாதுகாப்புச்சபை உறுப்பினர்களையும் இணங்க வைப் பதற்குப்பகீரதப்பிரயத்தனம் எடுக்க வேண்டும் என்று ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்காவின் நகல் வரைவு திட்டம் ஒன்பது பக்கங்களைக் கொண்டது. பொருளாதாரத் தடைகள் விதிப்புக்கான அத்தியாயத்துக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட 'அடிப்படை வரைவுத் திட்டம்' என இதற்கு தலைப்பு இடப்பட்டுள்ளது. வரைவுத் திட்டத்தின் முழு விவரங்களும் திங்கட்கிழமை ரொய்ட்டர் செய்திச் சேவையில் வெளியாகியுள்ளன.

ஜூன் 27 ஆம் திகதி சிம்பாப்வே ஜனாதிபதி ரொபர்ட் முகாபேயினால் மீள நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல், ஐ. நா. சபையால் அங்கீகரிக்கப்பட மாட்டாது. அத்துடன் சிம்பாப்வேக்கான ஆயுத விற்பனை அல்லது இராணுவ தளபாடங்கள் விற்பனைக்கு சபையால் தடை விதிக்கப்படும் என,இதில் விவரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தனி நபர்களின் சொத்துக்களை முடக்குமாறும், ஜனநாயக நடைமுறைக்கு குந்தகமாக, சிம்பாப்வே அரசுக்கு உதவுவோர், அரசியல் குரோத, விரோத நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகளுக்கு ஆதரவு வழங்குவோர் ஆகியோரின் பயணங்களுக்குத் தடை விதிக்குமாறும் வரைவுத் திட்டம் ஐ. நா. சபையைக் கோரியுள்ளது.

## ஒரு வாரகாலத்தின் பின் டச்சுத் தூதரகத்திலிருந்து வெளியேறினார் சவன்கிராய்

ஹராரே, ஜூலை 02

சிம்பாப்வேயின் தலைநகரான ஹராரேயிலுள்ள டச்சுத் தூதரகத்தில்கடந்த ஒருவார காலமாகத் தஞ்சம் புகுந்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் மோர்கண் சவன் கிராய், நேற்றுச் செவ்வாய்க்கிழமை தூதரகத்தை விட்டு வெளியேறினார் என டச்சு அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

"தேர்தலுக்குப் பின்னர் ஒருவாறு பதற்ற நிலை தணிந்துள்ளது. அதனால் வீடு திரும்ப முடிவு செய்து விட்டேன்." - எனத் தாம் வெளியேறுவதற்கு முன்னர் சவன்கிராய் குறிப்பிட்டார் என டச்சு வெளிவிவகார அமைச்சர் ஊடகவியலாளருக்குத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினருக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைகள், மிரட்டல்களையொட்டி, தமது உயிருக்கும் உத்தரவாத மில்லை என எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதித்தேர்தல் வேட்பாளருமான சவன்கிராய் போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். பின்னர் அவர், தலைநகரிலுள்ள டச்சுத் தூதரகத்தில் தஞ்சம்புகுந்தார் என்பது தெரிந்ததே.

# கூட்டுப் படைகளின் வான் தாக்குதலில் ஆப்கானில் 33 தலிபான்கள் உயிரிழப்பு




காபூல், ஜூலை 02

கிழக்கு ஆப்கானிஸ்தானில் நேற்று செவ்வாய்க்கிழமை அமெரிக்கத் தலைமையிலான சர்வதேசப் படைகள் தலிபான் இலக்குகளை நோக்கி சரமாரியாக வான்வழித் தாக்குதல்களை மேற்கொண்டன. இத்தாக்குதல்களில் 33 தலிபான் போராளிகள் பலியானார்கள் என கூட்டுப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தலைமையகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. கோஷ்ட் மாகாணத்தில் தீவிரவாதப் போராளிகளைக் கொண்ட பல குழுக்கள் இயங்குகின்றன. இவற்றில் தலிபான் குழுக்களும், அல்-குவைதா குழுக்களும் அடங்கும். முதலில் தலிபான்களின் இலக்குகள் மீது, ஹெலிகொப்டர்களும் குண்டு வீச்சு விமானங்களும் வான்வழித் தாக்குதல்களை மேற்கொண்டன என அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வேவு விமான மொன்று திங்கட்கிழமை இரவு இப்பகுதியில் வேவுப் பணியை மேற்கொண்டது. அப்போது பல இலக்குகள் கண்டு பிடிக்கப்பட்டன. பின்னர் இவை உத்தரவாதப் படுத்தப்பட்டன. மறுதினமான நேற்று செவ்வாய்க்கிழமை, தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன என்றும் இவ்வறிக்கையில் விவரிக் கப்பட்டுள்ளது.

வேவுப் பணியின் போது ஆயுதங்கள், ரொக்கெட்டுகள், எறிகுண்டுகள், இதர ஆயுதங்கள் ஆகியவை சகிதம் இருந்த போராளிகள் துல்லியமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள் என கூட்டுப்படையின் பேச்சாளர் லெப்டினண்ட் நதான் பெரி குறிப்பிட்டார் என ஏ.எப்.பி. செய்தி நிறுனமும் தெரிவித்துள்ளது.

# பிரிட்டனில் திருமணம் செய்பவர்களை விட விவாகரத்து பெறுவோர் தொகை அதிகரிப்பு

லண்டன், ஜூலை 02

பிரிட்டனில் திருமணம் செய்பவர்களை விட விவாகரத்து பெறுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பிரிட்டன் புள்ளி விவரத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு:-

பிரிட்டனில் கடந்த 113 ஆண்டுகளில் இல்லாத வகையில், 2006இல் திருமணம் செய்தவர்கள் எண்ணிக்கை படுபாதாளத் துக்கு சரிந்துள்ளது. இங்கிலாந்து, வேல்ஸில் மொத்தம் 2,36,980 திருமணங்களே நடைபெற்றுள்ளன. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இது 50.3 சதவீதம் குறைவு. 1997 இல் இருந்து திருமணங்களின் எண்ணிக்கை ஒரு லடசம் முதல் ஒன்றரை லட்சம் வரை படிப்படியாக குறைந்து வருகின்றது.

குறிப்பாக, விவாகரத்துப் பெறுபவர்களும் திருமணம் செய்யாமலேயே ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, 16 வயதுக்கு மேற்பட்ட பெரும்பாலானோர் பிரம்மச்சாரிகளாவோ அல்லது விவாகரத்துப் பெற்றவர்களாகவோ உள்ளனர். அதிக வயதில் திருமணம் செய்யும் [illegible] மாக இருக்கலாம் [illegible] கூறப்பட்டுள்ளது.




வியட்நாமில் நடைபெற்ற 2008ஆம் ஆண்டுக்கான 'மிஸிஸ் வேல்ட்' அழகிப் [illegible] உக்ரைன் நாட்டைச் சேர்ந்த [illegible] மிமரன்கோவா வெற்றி பெற்றார். அந்த மகிழ்சசியில் பூரிக்கிறார் நடாய்லா.

# பக்கவாட்டிலுள்ள இருக்கைகளே விமானத்தில் பாதுகாப்பானவை!

## ஆய்வில் உறுதியானது

லண்டன், ஜூலை 02

விமானங்களில், பக்கவாட்டு இருக்கைகள் தாம் பாதுகாப்பானவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. விமானங்கள் விபத்துக்குள்ளாகும் போது, பாதுகாப்பான இருக்கை எது என்பது குறித்து நடத்தப்பட்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

105 விமான விபத்துக்கள் குறித்து ஆராய்ந்தபோது, இவற்றில் உயிர் தப்பிய இரண்டாயிரம் பேரில், பெரும்பாலானோர், விமானங்களில் "பக்கவாட்டு இருக்கைதான் பாதுகாப்பானது என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலும், விமானத்தில் பயணம் செய்வோர், ஜன்னல் பக்கம் உள்ள இருக்கையை விரும்பித் தேர்வு வெய்வது வழக்கம். ஆனால், இது விபத்தின் போது, ஆபத்தை ஏற்படுத்தும் என்பது அமெரிக்காவின் உள்நாட்டு போக்குவரத்து ஆணையத்தால், கிரீவிச் பல்கலைக்கழகம் மூலம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

விபத்துக்குள்ளாகி விமானம் தீப்பற்றி எரியும் போது, முதலில் பாதிக்கப்படுவது ஜன்னல் ஓரம் இருக்கும் இருக்கைகள்தாம். விமானத்தின் முன்பக்க இருக்கைகளில் இருந்தாலும், விபத்தின் போது, அவர்கள் உயிர்தப்ப 65 சதவீத வாய்ப்பு உள்ளது. பின்பக்கம் இருப்போர் உயிர்தப்ப 53 சதவீதம் மட்டுமே வாய்ப்புள்ளது. பக்கவாட்டு இருக்கைகளில் இருப்போரில் உயிர் தப்ப 64 சதவீத வாய்ப்பு உள்ளது. மற்றைவர்களுக்கு 58 சதவீதம் மட்டுமே வாய்ப்பு உள்ளது. - இவ்வாறு அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக பேரவை கலைக்கப்பட்டது; புதிய உறுப்பினர் நியமனத்தின் பின்னரே மீண்டும் கூடும்

யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களின் பதவிக் காலம் கடந்த சனிக்கிழமையுடன் முடிவடைந்ததால் பேரவை கலைக்கப்பட்டுள்ளது.

பேரவைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் மூன்று வருட பதவிக்காலம் கடந்த சனிக்கிழமையுடன் முடிவடைந்து அன்று நடைபெற்ற கூட்டத்துடன் பேரவை கலைக்கப்பட்டது.

புதிய உறுப்பினர்களை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்த பின்னரே அடுத்த பேரவை கூடும். மாதந் தோறும் கடைசிச் சனிக்கிழமை பேரவை கூடுவது வழமையாகும்.

அடுத்த மாதம் கடைசிச் சனிக்கிழமையான 26ஆம் திகதிக்கு முன்னர் புதிய உறுப் பினர்கள் நியமிக்கப்பட்டாலே புதிய பேரவை அன்று கூடும்.

பேரவையில், பதவி வழியாக அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் தொடர்ந்து பதவியில் இருப்பர் என்றும் நியமிக்கப்பட்ட 13 அங்கத்தவர்களே பதவி இழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-01)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படவுள்ளன.

இந்தியாவால் ஏற்கனவே வழங்கப்படும் விசேட கடற்படைப் பயிற்சிகளுக்கு அப்பால் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படு கின்றன.

நீர்மூழ்கி எதிர்ப்பு யுத்தம், தொலைத் தொடர்பு போன்றவற்றில் இந்தியா ஏற்கனவே இலங்கைப் படையினருக்குப் பயிற்சி வழங்கி வருகின்றது.

இந்தியா இலங்கைக்கான ஆயுத உதவிகளை அதிகரித்துள்ள சூழ்நிலையிலேயே, இது இடம்பெறுகின்றது. புது டில்லி பேரழிவை ஏற்படுத்தாத ஆயுதங் களையே இலங்கைக் குத் தான் வழங்குகின்றது எனக் கூறுகிறது.

இலங்கையில் அதிகரித்துவரும் சீனாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த செல்வாக்கை எதிர்கொள்வதற்காகவே ஆயுத விநியோகம் மற்றும் இராணுவப் பயிற்சி என்ற இந்த இரட்டை தந்திரோபாயத்தை இந்தியா பின்பற்றுகின்றது. மேலும் புலனாய்வுத் தகவல்கள்-ஒருங்கிணைந்தகடல்கண்காணிப்பு போன்ற வற்றிலும் அது ஈடுபட் டுள்ளது.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட இந்திய உயர்மட்டக்குழுவினர் சீனா, பாகிஸ்தானிடம் இலங்கை ஆயுதக் கொள்வனவில் ஈடுபடுவது குறித்துக் கவலை தெரிவித்திருந்தனர்.

முந்திய கொள்கை மாற்றம்

தமிழ்நாட்டின் உணர்வலைகள் குறித்த கரிசனை காரணமாக இந்தியா இலங்கையுடன் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடாத போதிலும் இலங்கைக்கு ஆயுதங்களை விநியோகிப்பதில்லை என்ற தனது முன்னைய கொள்கையைக் கை விட்டுள்ளது.

2002 இல் 'சுகன்யா' கடலோரப் பாது காப்புக் கலத்தினை வழங்குவதுடன் இலங்கைக்கான ஆயுத விநியோகத்தை ஆரம்பித்த இந்தியா, சமீப காலத்தில் இதனை அதிகரித்துள்ளது. இராணுவப் பயிற்சிகளையும் தீவிரப்படுத்தியுள்ளது.

வேறு பல நாடுகளிற்கும் இந்தியா பயிற்சிகளை வழங்குகின்றபோதிலும், இலங்கைக்கு வழங்கும் பயிற்சிகள் மிகவும் நவீனமானவை.

இந்தியாவின் முன்னணி பயிற்சிக் கல்லூரியான டெஹராடூனில் இலங்கையைச் சேர்ந்த 100 கடேட்களுக்கு இரண்டு விசேட கற்கைநெறிகள் இடம்பெறுகின்றன.

மேலும் புனேயில் உள்ள இராணுவப் பொறியியல் கல்லூரியில் 30 இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கும், டெவ்லாலி யில் உள்ள ஆட்டிலறி கல்லூரியில் 15 பேருக்கும், அஹமெட் நகரிலுள்ள இயந்திரக் காலாட்படைப்பிரிவு நிலையத்தில் 29 பேருக்கும் பயிற்சி வழங்கப்படுகிறது.

மேலும் ஜபல்பூர் வடோரா உட்பட வேறு பல பகுதிகளிலும் பயிற்சி வழங்கப்படவுள்ளது. - என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ)

## சிவிலியன்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் பொதுமக்களை இலக்கு வைக்கும் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

கடந்த மூன்று மாதங்களில் பொதுமக்கள் பயணம் செய்யும் வாகனங்கள் மற்றும் அவர்கள் அதிகமாகக் கூடும் பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்களில் 80 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மாகாணசபைத் தேர்தலுடன் சேர்ந்து கொண்ட பதற்றமும் நிலைமையை மேலும் தீவிரப்படுத்தியது. தேர்தல் வன்முறைகள் காரணமாகப் பலர் கொல்லப்பட்டனர்.

பொதுமக்கள் நேரடியாக இலக்கு வைக் கப்படுகின்றனர் எனவும், படு கொலைகள், தாக்குதல்கள், கைதுகள், காணாமற்போதல் என்பவற்றுக்குப் பொதுமக்கள் ஆளாகின்றனர் எனவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிற்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சர்வதேச சட்டம் பொதுமக்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதைத் தடை செய்கின்றது. மோதலின் பாதிப்பிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக சகல சந்தர்ப்பங்களிலும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென செஞ்சிலு வைச் சர்வதேசக்குழு மோதலில் சம்பந்தப் பட்ட தரப்புகளைக் கேட்டுக்கொள்கின்றது.

பொதுமக்களுக்கு ஏற்படும் உயிரிழப்புகளை நாங்கள் கண்டிக்கின்றோம் என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளின் இலங்கைக்கான தலைவர் டூன் வன்டென் கொவ் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தைய தாக்குதல்களுக்குக் காரணமானவர்களை இனி சகல சந்தர்ப்பங்களிலும் பொதுமக்களின் உயிர்களுக்கு மதிப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சமீபத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியாளர் ஒருவரும் கொல்லப்பட்டார் - இப்படி அந்த அமைப்பு மேலும் தெரிவித்தது. (உ)

## ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பணிக்குத் திருப்புவார்கள் என்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தகவலதிகாரி தெரிவித்தார்.

எனினும், அங்கு நடைபெற்ற சம்பவம் என்ன என்பது தொடர்பான விவரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார். இதனிடையில் இன்று செஞ்சிலுவைச் சர்வதே சக் குழுவினர் ஓமந்தைக்கு கடமைக்குச் சமுக மளிக்க மாட்டார்கள் என்ற தகவல் அந்தக் குழுவைச் சேர்ந்த அதிகாரிகளினால் கிளிநொச்சி மற்றும் வவுனியா அரச அதிபர்களுக்கு நேற்றுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை இரு அரச அதிபர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். (சி)

## ஜனாதிபதி பயணிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அந்தப் பாலத்தைத் திறந்து வைத்து நேற்று நண்பகல் 1.00 மணியளவில் அங்கு உரையாற்றிக் கொண்டிருந்த போது பொத்துவில் காட்டுப்பகுதியிலி ருந்து பொத்துவில் சிறப்பு அதிரடிப்படை முகாமை நோக்கி விடுதலைப் புலிகளால் திடீரென அகோர ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று கூறப்படுகின்றது.

சுமார் அரைமணிநேரம் நீடித்த அந்தத் தாக்குதலால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. பாலத் திறப்பு விழா நடந்த பிரதேசத் துக்கும் பதற்றம் தொற்றிக்கொண்டது எனக் கூறப்பட்டது.

இதனால் ஜனாதிபதியை ஏற்றிவருவ தற்காக ஹெலிக்கொப்டர்களின் அணி ஒன்று அறுகம்குடா நோக்கி விரைந்தது.

அப்படி விரைந்துகொண்டிருந்த ஹெலி மீதே விடுதலைப் புலிகள் தரையிலிருந்து தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

அம்பாறை கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பகுதிக்கு மேலாக ஹெலி பறந்து கொண்டிருந்தபோது பிற்பகல் 1.20 மணியளவில் விடுதலைப் புலிகளால் இத்தாக்குதல் நடத்தப்பட்டது எனக் கூறப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான ஹெலி சிவப்பு விளக்கை எரிய விட்டவாறே தாழ்வாகப் பறந்து உல்லைப் பாலத்திற்கு அருகில் உள்ள பாடசாலை மைதானத்தில் அவசரமாகத்தரையிறக்கப்பட்டது.

தரையிறக்கப்பட்ட ஹெலியை மக்கள் தற்போது பார்வையிட்டு வருகின்றனர். அது மீண்டும் பயன்படுத்த முடியாதளவுக் குக் கடுமையாகச் சேதமடைந்திருக்கின் றது என ஒரு தகவல் தெரிவித்தது.

ஜனாதிபதியின் பயணத்திற்கு என ஒதுக்கப்பட்டிருந்த ஹெலிகளில் ஒன்று அவசரமாகத் தரையிறக்கப்பட்டதை இலங்கை விமானப்படையும் ஒத்துக்கொண்டிருக் கின்றது.

இது குறித்து விமானப்படைப் பேச்சா ளர் ஜானக நாணயக்கார தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதியின் பயணத்திற்கு என ஒதுக்கப்பட்டிருந்த மூன்று ஹெலிகளில் ஒன்று அறுகம்குடா, உல்லைப் பகுதியில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஹெலி இயந்திரக் கோளாறு காரணமாகவே தரையிறக்கப்பட்டதாக முதல்கட்டமாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாறை உகண இராணுவ முகாமில் எரிபொருளை நிரப்பிவிட்டு அறுகம்குடா நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தபோதே இந்த ஹெலிக்கொப்டர் தரையிறக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த ஹெலியில் ஏற்பட்ட கோளாறு சீர்செய்யப்பட்டு வருகின்றது.

தரையிறக்கப்பட்ட ஹெலியில் ஜனாதிபதி இருக்கவில்லை. அவர் அறுகம்குடா பாலத்திறப்பு விழாவில் அச்சமயம் இருந்தார். - என்றார்.

இதேவேளை, பொத்துவில் சிறப்பு அதிரடிப்படையினரின் முகாம் மீதான கடுமையான ஷெல் தாக்குதலில் படையின ருக்குப் பலத்த இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (உ)

## ஊடகவியலாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அது தெரிவித்துள்ளது.

இலங்கையின் சகல மக்களையும் இந் தத் தாக்குதலை ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் மீதான தாக்குதலாகக் கணிக்குமாறு கோரியுள்ள சுதந்திர ஊடக அமைப்பு, அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ரி.என்.எல்.தொலைக்காட்சி சேவை யின் முன்னாள் செய்தி இயக்குநரும், தற் போது இலங்கை பத்திரிகை ஸ்தாபனத் தின் விரிவுரையாளரும், ஆய்வாளருமான நாமல் பெரேராவும் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகத்தின் அரசியல் அதிகாரி மகேந்திர ரட்ணவீரவும் நாரஹன்பிட்டிக்கும், கிருலப்பனைக்கும் இடையில் பயணம் செய்து கொண்டிருக்கையில் வழிமறிக்கப்பட்டனர்.

இராணுவ முகாம், அரச தகவல் ஊடகத் திணைக்களம், சோதனைச் சாவடி என்பன அமைந்திருந்த பகுதியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. தாக்குதலை மேற்கொண்டவர்கள் நாமல் பெரேராவை கடத்த முற்பட்டனர். எனினும் அவர் கடுமையாக எதிர்க்க அவரையும் நண்பரையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இருவரும் அப்பலோ மருத்துவமனையில் தற்போது சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். தாக்குதலை மேற்கொண்டவர்கள் நாமல் பெரேரா குறித்தே தமது சீற்றத்தை வெளிப்படுத்தி யுள்ளனர்.

இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் அரச ஊடகம் ஒன்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சிந்தித்து வரும் சூழ்நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் ஜனநாயகம் மற்றும் ஊடக சுதந்திரத்தின் மீது இடம்பெறும் தாக்குதல்களில் இந்தச் சம்பவமும் ஒன்று.

அரச ஊடகங்களும் அரச அமைச்சர்களின் இணையத்தளங்களும் பத்திரிகையாளர்களையும் ஊடகவியலாளர்களையும் விடுதலை புலிகளின் ஆதரவாளர்கள் என பூதாகரமாக சித்திரிக்கின்றன. மேலும் உடல் ரீதியாகத் தாக்குதல் இடம்பெறுவ துடன் எவரும் இதற்காக நீதியின் முன் நிறுத்தப்படுவதுமில்லை.

ஜனநாயக சுதந்திரம், அடிப்படை உரிமை, சட்டத்தின் ஆட்சி போன்றவற்றை அரசின் உயர் அதிகாரிகள் பல தடவைகள் வெளிப்படையாக கண்டித்துள்ளனர்.

இதன் காரணமாக இலங்கையின் ஊடக சுதந்திரத்தை சூழ்ந்துள்ள அச்சச் சூழ் நிலையையும் அச்சுறுத்தலையும் போக்கு வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கின்றது என்ற நம்பிக்கை உருவாகவில்லை - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## எட்டுக் குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பில் கூறப்பட்டது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரிப் பகுதியில் உள்ள விடு தலைப் புலிகளின் தாக்குதல் தொடர்பா டல் நிலையம் மீது நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் விமானப்படையினரின் எம். ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல்களை நடத்தின என்றும் படைத் தரப்பில் மேலும் கூறப்பட்டது. (சி)

## தரம் 5...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலை விடுமுறைக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்படும். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை மதிப்பீட்டுப் பரீட்சையாக மாற்றுவது தொடர்பாகவும் அரச கவனம் செலுத்தி வருகிறது என் றும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

## விசேட அதிரடிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதினைந்து படையினர் வரை காயமடைந்துள்ளனர். அவர்களில் ஆறு பேர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

- இவ்வாறு விடுதலைப் புலிகள் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலிருந்து விடுதலைப் புலிகளை முற்றாக விரட்டியடித் துக் கிழக்கு மாகாணத்தை விடுவித்துவிட்டதாக அரச அறிவித்துள்ள பின்னணியில் கிழக்கில் தரையிலிருந்து ஹெலிக்கொப்டரை நோக்கிப் புலிகள் தாக்குதல் நடத்தியமையும், விசேட அதிரடிப்படை யின் ஒரு முகாமை இலக்குவைத்து சுமார் அரை மணிநேரம் அகோர ஷெல் தாக்குதல் நடத்தியமையும் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யிருக்கின்றன எனக் கூறப்படுகின்றது. (உ)


தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும்.

Mobile Phone Repairing
Haed Ware — Hard Ware Repairing
Soft Ware — Phone Lock
காலம்:- 1 மாதம்

Diploma in Hard Ware Engineering
காலம்:- 3 மாதங்கள்

* றேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் றிப்பெயறிங்
சகல இன றேடியோக்கள், ரெலிவிசன், வீடியோடெக், CD, Amp திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். காலம்:- 9 மாதங்கள்

* ஏயர் கொண்டிசனிங்
சகல குளிசாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன்கள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். காலம்:- 6 மாதங்கள்

* எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங், வீட்டு மின் வேலை, மோட்டார், Fan, Transformer வைண்டிங் செய்யப்படும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:- 6 மாதங்கள்

ஆரம்பம்:- 06/07/2008 ஞாயிறு
07/07/2008 திங்கள்

JAFFNA TECHNICAL INSTITUTE
இல, 45 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0212226434, 0779254078



O/L PAPER CLASS ENGLISH
ஆரம்பம்:- 03.07.2008 (வியாழன்) காலை 6 மணி
BY. SUBATHEESAN
பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.
(Sub Post Office அருகில்)



CHEMISTRY
A/L 2010
பிரிவு I
ஒட்சியேற்றலும் தாழ்த்தலும்
(Sat, Sun - 4 - 5Pm)
By. S.Vasu
NAVALAR Jaffna.

PHYSICS
A/L 2009
HEAT
(Mon, Fri - 4.30 - 5.30Pm)
ஆரம்பம் 04.07.2008 Fri-4.30 Pm
K.Selvan
NAVALAR Jaffna.



வந்துவிட்டது வெற்றித்தேர்வு !!
திருமலை.எஸ்.கணேசலிங்கம் ADE அவர்களின்
2008 புலமைப் பரிசில். 2009 புலமைப் பரிசில் பரீட்சை
தரம்:5.வெற்றித்தேர்வு-18,19
தரம்:4.வெற்றித்தேர்வு.1,2,3,4,5
புத்தகசாலைகளில்பதிவுசெய்துதொடராகப்பெறுங்கள்.
தரம் :4, 5 மாவட்ட வெற்றித்தேர்வுப் பரீட்சை.
ஒவ்வொரு ஞாயிறும் 6am, 8am, 10am, 2pm, 4pm
நல்லூர் சயன்ஸ் அக்கடமியில்
மாணவர்கள் எவரும் பரீட்சை எழுதலாம்.
திரு.கணேசலிங்கம் ADE அவர்கள் செயலமர்வு நடாத்த யாழ்ப்பாணம் வருகின்றார், வெற்றித்தேர்வு பரீட்சை விண்ணப்பத்திரம் பெறுவோர் மட்டுமே கலந்து கொள்ளமுடியும்.



B COM
PART I
PART II
FINAL
யாழ்.பல்கலைக்கழகம் (வெளிவாரி)
★புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 05.07.08 (8 மணி)
குறிப்பு:- 1St IN COM புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 05.07.08 (8 மணி)
விபரங்கட்கு :- நிர்வாகி S.அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.